05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தேன்கூடு கவிதைத் தொகுப்புக் காட்டும் மலேசியத் தமிழச் சமூகச் சாயல்.

PEMAPARAN IMEJ MASYARAKAT TAMIL MALAYSIA DALAM KUMPULAN PUISI TRADISIONAL 'THENKOODU'

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பொன்னி த/பெ கண்ணன்
PONNEI A/P KANNAN

பல்கலைக்கழகம்
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2021

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தேன்கூடு கவிதைத் தொகுப்புக் காட்டும் மலேசியத் தமிழச் சமூகச் சாயல்.
PEMAPARAN IMEJ MASYARAKAT TAMIL MALAYSIA DALAM KUMPULAN PUISI TRADISIONAL ‘THENKOODU’

பொன்னி த/பெ கண்ணன்
PONNEI A/P KANNAN

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

TESIS INI DIKEMUKAKAN BAGI MEMENUHI SYARAT MEMPEROLEH
IJAZAH DOKTOR FALSAFAH

மொழியியல் தொடர்பாடல் புலம் சுலுத்தான் இதுரீசு கல்வியியல்
பல்கலைக்கழகம்
FAKULTI BAHASA DAN KOMUNIKASI
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2021

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

Sila tanda (√)
Kertas Projek
Sarjana Penyelidikan
Sarjana Penyelidikan dan Kerja Kursus
Doktor Falsafah ✓

INSTITUT PENGAJIAN SISWAZAH

PERAKUAN KEASLIAN PENULISAN

Perakuan ini telah dibuat pada ……7…(hari bulan)……Sept……. (bulan) 20…21…..

i. Perakuan pelajar :

Saya, **PONNEI A/P KANNAN, P20131001219, FAKULTI BAHASA & KOMUNIKASI** (SILA NYATAKAN NAMA PELAJAR, NO. MATRIK DAN FAKULTI) dengan ini mengaku bahawa disertasi/tesis yang bertajuk **PEMAPARAN IMEJ MASYARAKAT TAMIL MALAYSIA DALAM KUMPULAN PUISI TRADISIONAL 'THENKOODU'**

adalah hasil kerja saya sendiri. Saya tidak memplagiat dan apa-apa penggunaan mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dilakukan secara urusan yang wajar dan bagi maksud yang dibenarkan dan apa-apa petikan, ekstrak, rujukan atau pengeluaran semula daripada atau kepada mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dinyatakan dengan sejelasnya dan secukupnya

Tandatangan pelajar

ii. Perakuan Penyelia:

Saya, **Dr. Manonmani Devi A/P M.A.R Annamalai** (NAMA PENYELIA) dengan ini mengesahkan bahawa hasil kerja pelajar yang bertajuk **PEMAPARAN IMEJ MASYARAKAT TAMIL MALAYSIA DALAM KUMPULAN PUISI TRADISIONAL 'THENKOODU'**

(TAJUK) dihasilkan oleh pelajar seperti nama di atas, dan telah diserahkan kepada Institut Pengajian Siswazah bagi memenuhi sebahagian/sepenuhnya syarat untuk memperoleh Ijazah **DOKTOR FALSAFAH** (SLA NYATAKAN NAMA IJAZAH).

17 Sept 2021

Tarikh

Tandatangan Penyelia

Dr. Manonmani Devi A/P M.A.R Annamalai
Pensyarah Kanan
Jabatan Bahasa Moden
Fakulti Bahasa dan Komunikasi
Universiti Pendidikan Sultan Idris
Tanjong Malim, Perak.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

INSTITUT PENGAJIAN SISWAZAH /
INSTITUTE OF GRADUATE STUDIES

BORANG PENGESAHAN PENYERAHAN TESIS/DISERTASI/LAPORAN KERTAS PROJEK
DECLARATION OF THESIS/DISSERTATION/PROJECT PAPER FORM

Tajuk / *Title*: **PEMAPARAN IMEJ MASYARAKAT TAMIL MALAYSIA DALAM KUMPULAN PUISI TRADISIONAL 'THENKOODU'**

No. Matrik /*Matric's No.*: **P20131001219**

Saya / *I* : **PONNEI A/P KANNAN**

(Nama pelajar / *Student's Name*)

mengaku membenarkan Tesis/Disertasi/Laporan Kertas Projek (Kedoktoran/Sarjana)* ini disimpan di Universiti Pendidikan Sultan Idris (Perpustakaan Tuanku Bainun) dengan syarat-syarat kegunaan seperti berikut:-
acknowledged that Universiti Pendidikan Sultan Idris (Tuanku Bainun Library) reserves the right as follows:-

1. Tesis/Disertasi/Laporan Kertas Projek ini adalah hak milik UPSI.
   The thesis is the property of Universiti Pendidikan Sultan Idris
2. Perpustakaan Tuanku Bainun dibenarkan membuat salinan untuk tujuan rujukan dan penyelidikan.
   Tuanku Bainun Library has the right to make copies for the purpose of reference and research.
3. Perpustakaan dibenarkan membuat salinan Tesis/Disertasi ini sebagai bahan pertukaran antara Institusi Pengajian Tinggi.
   The Library has the right to make copies of the thesis for academic exchange.
4. Sila tandakan (√) bagi pilihan kategori di bawah */ Please tick (√) for category below:-*

[ ]	**SULIT/*CONFIDENTIAL***	Mengandungi maklumat yang berdarjah keselamatan atau kepentingan Malaysia seperti yang termaktub dalam Akta Rahsia Rasmi 1972. / *Contains confidential information under the Official Secret Act 1972*
[ ]	**TERHAD/*RESTRICTED***	Mengandungi maklumat terhad yang telah ditentukan oleh organisasi/badan di mana penyelidikan ini dijalankan. / *Contains restircted information as specified by the organization where research was done.*
[/]	**TIDAK TERHAD / *OPEN ACCESS***	

(Tandatangan Pelajar/ Signature)

Dr. Manonmani Devi A/P M.A.R Annamalai
Pensyarah Kanan
Jabatan Bahasa Moden
Fakulti Bahasa dan Komunikasi
Universiti Pendidikan Sultan Idris
Tanjong Malim, Perak.

(Tandatangan Penyelia / *Signature of Supervisor*)
& (Nama & Cop Rasmi / *Name & Official Stamp*)

Tarikh: **17 September 2021**

Catatan: Jika Tesis/Disertasi ini **SULIT** @ **TERHAD**, sila lampirkan surat daripada pihak berkuasa/organisasi berkenaan dengan menyatakan sekali sebab dan tempoh laporan ini perlu dikelaskan sebagai **SULIT** dan **TERHAD**.

Notes: If the thesis is CONFIDENTAL or RESTRICTED, please attach with the letter from the organization with period and reasons for confidentiality or restriction.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நன்றியுரை

அகத்தும் புறத்தும் அருங்கொடைகள் ஈந்தா இறைவனுக்கே புகழனைத்தும்!

“தேன்கூடு கவிதைத் தொகுப்புக் காட்டும் மலேசியத் தமிழச் சமூகச் சாயல்” எனும் இவ்வாய்வினை மேற்கொள்ள வாய்ப்பும் அனுமதியும் அளித்த சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழகத்தாருக்கு முதற்கண் வணக்கம் உரித்தாகுக.

“தேன்கூடு கவிதைத் தொகுப்புக் காட்டும் மலேசியத் தமிழச் சமூகச் சாயல்” எனும் தலைப்பில் ஆய்வினை மேற்கொள்வதற்கு இசைவளித்ததோடு மட்டுமல்லாமல், அணுகியபோதெல்லாம் நல்ல பல கருத்துகளை வழங்கி ஆக்கமும் ஊக்கமும் நல்லாலோசனையும் வழங்கி, இவ்வாய்வேடு நன்முறையில் உருவம் பெற துணை புரிந்த எனது முதன்மை நெறியாளர் மூத்த விரிவுரைஞர் முனைவர் மனோன்மணி தேவி அண்ணாமலையும் இணை நெறியாளர் இணைப்பேராசிரியர் முனைவர் சாமிக்கண்ணு ஜெபமணி ஈசாக்கு சாமுவேலுவிற்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைப் புலப்படுத்தி மகிழ்கிறேன்.

ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுத்தது முதலாக, அச்சாகம் பெற்று ஆய்வேடாக வெளிவருவது வரை அனைத்து நிலைகளிலும் வழிகாட்டியாய் இருந்து நல்ல கருத்துகளையும், அறிவுரைகளையும் வழங்கி ஆய்வுப் பணியில் முழுமையாக ஈடுபடச் செய்ததோடு ஆய்வு தொடர்பான ஐயங்களை அவ்வப்போது கலந்து விவாதித்தும் தெளிவுபடுத்திய உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவர்களையன்றிப் பலவகையில் ஆக்கமும் ஊக்கமும் நல்கியோர் இன்னும் பலர் உளர்.

நல்லெண்ணத்துடன் உதவிய இவர்கள் அனைவருக்கும் எனது அன்பையும் நன்றியையும் இங்குப் பதிவுசெய்ய விழைகிறேன்.

(பொன்னி த/பெ கண்ணன்)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆய்வுச் சுருக்கம்

இவ்வாய்வு, மலேசியத் தமிழச் சமுகத்தினரிடையே ஏற்படும் சிக்கலைக் களையும் வண்ணம் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வானது தேன்கூடு கவிதைத் தொகுப்புக் காட்டும் மலேசியத் தமிழச் சமூகச் சாயல்களை அடையாளம் காணுதல்; தேன்கூடு கவிதைத் தொகுப்புக் காட்டும் மலேசியத் தமிழச் சமூகச் சிக்கல்களை ஆராய்தல்; தேன்கூடு கவிதைத் தொகுப்பில் காணப்படும் மலேசியத் தமிழச் சமூகப் படைப்புருவாக்கக் கருத்தாக்கங்களை விளக்குதல்; தேன்கூடு கவிதைத் தொகுப்பில் காணப்படும் மலேசியத் தமிழச் சமூகத்தில் நிலவும் சிக்கல்களை வெளிக்கொணர பயன்படுத்தப்பட்ட உத்திகளை ஆராய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வுக்குத் தேன்கூடு கவிதைத் தொகுப்பில் உள்ள 265 மரபு கவிதைகளும் உட்படுத்தப்பட்டுள்ளன. பண்புசார் முறைமையில் அமைந்த இவ்வாய்வினில் நூலக ஆய்வு நெறியும் சமூகவியல் கோட்பாடு – பயன்முறை நோக்கம் (Theory of Sosiology – Functionnalist Perspective) பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வுக்கு, ஆவணப் பகுப்பாய்வும் நேர்காணலும் கொண்டு கருப்பொருள் பகுப்பாய்வு சேகரிப்பட்டது. சேகரிக்கப்பட்ட தரவுகளின் நம்பகத்தன்மை, நீண்ட கால ஆய்வு, சக மதிப்பாய்வு (peer review) வல்லுநர் சரிபார்ப்பு, நுட்பங்கள் உள்ளிட்ட பல அணுகுமுறைகளின் வழி, உறுதிப் படுத்தப்படுத்தப்பட்டது. மேலும், ஆறு சமூகச் சாயல் அடிப்படையில் சமூகச் சிக்கல்கள் பகுக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வு மலேசியத் தமிழச் சமூகம் எதிர்கொண்ட சிக்கலுக்கு நல்ல தீர்வாகவும் வழிகாட்டியாகவும் அமைந்துள்ளது. மலேசியத் தமிழினம், கவிஞர் அடையாளம் கண்ட சிக்கல்களில் கவனம் செலுத்தி அச்சிக்கலுக்குக் கவிஞர் வழங்கிய படைப்புருவாக்கக் கருத்தாக்கங்களைத் தங்களின் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடித்தொழுகினால் நன்னடத்தைக் கொண்ட சமூகமாகவும் மற்றவர்களுக்கு நனிசிறந்த முன்னுதாரணமாகவும் வழிகாட்டியாகவும் வாழ இயலும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

PEMAPARAN IMEJ MASYARAKAT TAMIL MALAYSIA DALAM KUMPULAN PUISI TRADISIONAL '*THENKOODU*'

ABSTRAK

Kajian ini menyelidiki masalah sosial yang menggugat kehidupan masyarakat Tamil Malaysia seperti yang terakam dalam puisi-puisi nukilan Seeni Naina Mohamed. Objektif kajian ini untuk mengenal pasti imej masyarakat Tamil Malaysia, meneliti dan menganalisis saranan cadangan untuk menangani Isu-isu Sosial masyarakat Tamil Malaysia serta meneroka teknik-teknik yang digunakan oleh penyair untuk memaparkan masalah sosial masyarakat Tamil Malaysia yang tersuguh dalam Kumpulan Puisi Thenkoodu. Kajian ini menggunakan data sumber yang diambil daripada 265 buah puisi yang terdapat dalam *Kumpulan Puisi Thenkoodu*. Teori Sosiologi - Perspektif Functionnalist telah digunakan sebagai sandaran untuk kajian yang bersifat kualitatif ini. Kajian kualitatif ini menggunakan analisis tematik yang dikumpulkan melalui kajian dokumen dan temubual tidak berstruktur. Dapatan Kajian menunjukkan bahawa masalah sosial dalam masyarakat Tamil Malaysia dapat dibahagikan kepada enam petunjuk sosial. Dapatan kajian juga menunjukkan bahawa Puisi-puisi ini memaparkan jalan penyelesaian kepada masalah sosial itu mengikut perspektif penyair. Hasil kajian ini akan menjadi panduan dan pedomen yang baik kepada masyarakat Tamil Malaysia untuk mengelakkan masalah sosial yang berlaku dalam kehidupan mereka.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

THE IMAGE DEPICTION OF MALAYSIAN TAMIL COMMUNITY IN ‘THENKOODU COLLECTION OF TRADITIONAL POEMS’

ABSTRACT

This study tries to identify the image of the Malaysian Tamil community and to look at the social problems that surround the Malaysian Tamil community by analysing the poems written by Mr. Seeni Naina Mohamed. Its aim is to explore the various techniques deployed in exposing the prevailing problems amongst the Tamil community of Malaysia, as found in the ‘Thenkoodu Collection of Poems’. This study uses the sources of data which are taken from the 265 poems found in the ‘Thenkoodu Collection of Poems’. A Sociologist Theory – Functionalist Perspective is used as a reliant for this qualitative study. This study is aimed at analysing the underlying social problems of the Malaysian Tamil community, using the thematic analysis collected through the documental study and the unstructured interviews conducted. The study finds that the social problems amongst the Malaysian Tamil community can be divided into 6 social indicators. These poems also put forth the solutions to the problems, according to the poet. They also become good exemplary guidelines for the problems faced by the Malaysian Tamil community and others at large.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பொருளடக்கம்

			பக்கம்
PENGAKUAN KEASLIAN PENULISAN			ii
PENGESAHAN PENYERAHAN TESIS			iii
நன்றியுரை			iv
ஆய்வு சுருக்கம்			v
ஆய்வின் சுருக்கம் (மலாய்மொழி)			vi
ஆய்வின் சுருக்கம் (ஆங்கிலமொழி)			vii
பொருளடக்கம்			viii
அட்டவணைப் பட்டியல்			xiv
வரைபடம் பட்டியல்			xv
குறிவரைவுப் பட்டியல்			xvi
இயல் 1 அறிமுகம்.			
	1.0	முன்னுரை	1
	1.2	ஆய்வின் பின்னணி	5
	1.2.1	மலேசியத் தமிழ்க் கவிதை இலக்கியம்	12
	1.2.2	தொடக்கக் காலக் கவிதை எழுதும் முயற்சிகள்	13
	1.2.3	இருபதாம் நூற்றாண்டின் தொடக்கமும் மலேசியத்தில் தமிழ்க்கவிதைகளும்	15
	1.2.4	விடுதலைக்குப் பிந்திய கவிதை இலக்கிய வளர்ச்சி	17
	1.2.5	சீனி நைனா முகம்மது	19

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.2.5.1 தமிழ்க்கல்வி 21

1.2.5.2 தொழில் 22

1.2.5.3 கவிதை ஈடுபாடு 23

1.2.5.4 தொடக்கக் கால எழுத்துலக ஈடுபாடு 24

1.2.5.5 இதழியல் பணியும்/ பொது பொறுப்புகளும் 26

1.2.5.6 இலக்கியம்/மொழி வளர்ச்சியில் பங்கு. 27

1.2.6.7 படைப்புகள். 29

1.2.5.8 பெற்ற விருதுகள் 32

1.2.5.9 பெற்ற பரிசுகள் 33

1.2.5.10மறைவு 34

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.2.5.11தேன்கூடு கவிதைத் தொகுப்பு 34

1.3 ஆய்வுச் சிக்கல் 35

1.4 ஆய்வு நோக்கம் 40

1.5 ஆய்வு வினா 41

1.6 ஆய்வு நன்மைகள் 42

1.7 ஆய்வு எல்லை 44

1.8 ஆய்வு மூலங்கள் 44

1.9 கலைச் சொல் விளக்கம் 45

1.9.1 சமூகம் 45

1.9.2 தமிழச் சமூகம் 47

1.9.3 சமூகச் சாயல் 49

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.9.4 சமூகச் சிக்கல் 51

1.9.5 உத்திகள் 52

1.9.6 சமூகப் படைப்புருவாக்கக் கருத்தாக்கம் 53

1.9.7 சமூகவியல் கோட்பாடு 53

1.9.8 பயன்முறை நோக்குக் கோட்பாடு 54

1.10 தொகுப்புரை 55

இயல் 2 முந்தைய ஆய்வுகள்

2.1 முன்னுரை 56

2.2 முந்தைய ஆய்வுகள் 57

2.2.1 உள்நாட்டு ஆய்வுகள் 57

2.2.2 வெளிநாட்டு ஆய்வுகள் 73

2.3 தொகுப்புரை 83

இயல் 3 ஆய்வு நெறிமுறை

3.1 முன்னுரை 85

3.2 ஆய்வு வடிவமைப்பு 86

3.3 ஆய்வுக் கட்டமைப்பு 89

3.4 தகவல் சேகரிப்பு முறை 90

3.4.1 ஆவணப் பகுப்பாய்வு 92

3.4.2 நேர்க்காணல் 94

3.5 தரவுகளைப் பகுப்பாய்வு முறை 95

3.5.1 சேகரித்த தகவல்களை ஒழுங்கமைத்தல் 96

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3.5.2 தரவுகளைக் கவனமாக வாசித்தல் 97

3.5.3 தரவுக் குறியீடு முறை செய்தல் 98

3.5.4 தரவுகளைக்கருப்பொருள் அடிப்படையில் பகுத்தல் 99

3.5.5 ஆய்வு முடிவுகளை ஆய்வு நோக்கத்திற்கு ஏற்ப எழுதுதல் 102

3.6 ஆய்வு நம்பகத்தன்மை 103

3.6.1 நீண்ட காலக்கெடு 104

3.6.2 சக மதிப்பாய்வு 105

3.6.3 பங்கேற்பாளரின் ஒப்புதல் 106

3.7 ஆய்வுக் கோட்பாடு 107

3.8 கோட்பாட்டுக் கட்டமைப்பு 112

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3.9 தொகுப்புரை 114

இயல் 4 ஆய்வு முடிவுகளும் பகுப்பாய்வும்

4.1 முன்னுரை 115

4.2 படைப்பாளர் 117

4.2.1 தமிழிலக்கணம் கற்றுத்தேறாப் படைப்பாளர் 122

4.2.2 தரமற்ற படைப்பு 126

4.2.3 புதுக்கவிதை மோகம் 132

4.2.4 படைப்பாளர்களின் கொச்சை மொழி பயன்பாடு 136

4.2.5 மலேசியத் தமிழச் சமூகப் படைப்புருவாக்கக் கருத்தாக்கம் 138

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.3	மொழிச்சிந்தனை		145
	4.3.1	மொழிப்பற்றின்மை	151
	4.3.2	மொழிக்கலப்பு	155
	4.3.3	மொழிக்கொலை	168
	4.3.4	எழுத்துத் திருட்டு	172
	4.3.5	மலேசியத் தமிழச் சமூகப் படைபுருவாக்கக் ருத்தாக்கம்	173
4.4	பெண்ணியம்		179
	4.4.1	ஆணாதிக்கம்	185
	4.4.2	தாய்மை	192
	4.4.3	மலேசியத் தமிழச் சமூகப் படைபுருவாக்கக் கருத்தாக்கம்	206
4.5	பண்பாடு		213
	4.5.1	உடையில் சீரழிவு	217
	4.5.2	புறத்தோற்றச் சீரழிவு	224
	4.5.3	கலைகளின் அழிவு	226
	4.5.4	மலேசியத் தமிழச் சமூகப் படைப்புருவாக்கக் கருத்தாக்கம்	230
4.6	தமிழினப்பண்புக்கூறுகள்		235
	4.6.1	தமிழினத்தின் பண்பற்ற குணங்கள்	239
	4.6.2	இனக் கடப்பாடின்மை	244
	4.6.3	மொழிப்பற்றின்மை	247
	4.6.4	மலேசியத் தமிழச் சமூகப் படைப்புருவாக்கக் கருத்தாக்கம்	251

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.7 கல்வி 255

4.7.1 தேர்வுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பது 260

4.7.2 மாணவர் சமூகத்தின் நிலை 270

4.7.3 மலேசியத் தமிழச் சமூகப் படைப்புருவாக்கக் கருத்தாக்கம் 276

4.8 மலேசியத் தமிழச் சமூகச் சிக்கல்களை வெளிக்கொணர பயன்படுத்தப்பட்ட உத்திகள் 286

4.9 தொகுப்புரை 386

இயல் 5 ஆய்வுக் கருத்தாடல்களும் பரிந்துரைகளும்

5.1 முன்னுரை 390

5.2 ஆய்வுச் சுருக்கம் கலந்துரையாடல்களும் 391

5.2.1 மலேசியத் தமிழச் சமூகச் சாயல் 393

5.2.2 மலேசியத் தமிழச் சிக்கல் 394

5.2.3 மலேசியத் தமிழச் சமூகப் படைபுருவாக்கக் கருத்துருவாக்கம் 398

5.2.4 மலேசியத் தமிழச் சமூகச் சிக்கல்களை வெளிக்கொணர பயன்படுத்தப்பட்ட உத்திகள் 400

5.3 விளைவுகளும் பரிந்துரைகளும் 403

5.4 எதிர்கால ஆய்வுக் களம் 404

5.5 முடிவுரை 405

மேற்கோள் நூல்கள் **407**

RINGKASAN EKSEKUTIF

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவணைப் பட்டியல்

எண்		பக்கம்
1.1	இலக்கியம்/மொழி பங்கு	28
3.1	சாயலும் சிக்கலும்	101
4.1	படைப்பாளர் சார்ந்த சிக்கல்கள்	120
4.2	மொழிச்சிந்தனை	149
4.3	பெண்ணியம்	184
4.4	பண்பாடு	216
4.5	தமிழினப் பண்புக்கூறுகள்	237
4.6	கல்வி	258
4.7	தமிழ் தமிழிலக்கிய மாணவர்களின் எண்ணிக்கை	274

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வரைபடப் பட்டியல்

எண்		பக்கம்
1.1	படைப்புகள்	29
1.2	படைப்புகள்- கருத்துக் கட்டுரைகள் (1)	31
1.3	படைப்புகள்- கருத்துக் கட்டுரைகள் (2)	32
3.1	ஆய்வு அணுகுமுறை	88
3.2	ஆய்வுக் கட்டமைப்பு	89
3.3	பகுப்பாய்வுச் செயல்முறை	96
3.4	ஆய்வின் கோட்பாட்டுக் கட்டமைப்பு	113
4.1	தமிழ்ச் சமூகச் சாயல்	386

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

குறிவரைவு

எண்		பக்கம்
4.1	படைப்பாளர் சமூகமும் சிக்கலும்	121
4.2	மொழிச்சிந்தனைச் சாயலும் சிக்கலும்	150
4.3	பெண்ணியச் சாயலும் சிக்கலும்	184
4.4	பண்பாடு சாயலும் சிக்கலும்	216
4.5	தமிழினப்பண்புக்கூறுகளும் சிக்கலும்	237
4.6	கல்வி சமூகச் சாயலும் சிக்கலும்	258
4.7	2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை எசு.பி.எம் தேர்வில் தமிழ்மொழியும் தமிழிலக்கியமும் எடுக்கும் மாணவர்கள்	275
4.8	சிக்கலுக்கான உத்திகள்	388

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இயல் 1

அறிமுகம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.0 முன்னுரை

இவ்வியல் "தேன்கூடு கவிதைத் தொகுப்புக் காட்டும் மலேசியத் தமிழச் சமூகச் சாயல்" என்ற தலைப்பில் செய்யப்பட்ட ஆய்வின் அறிமுகவியலாக அமைந்துள்ளது. இவ்வியலில் பத்துக் கூறுகள் உள்ளன. அவை, முன்னுரை, ஆய்வுப் பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வு நோக்கம், ஆய்வு வினா, ஆய்வு நன்மைகள், ஆய்வு எல்லை, ஆய்வு மூலங்கள், கலைச்சொற்கள், முடிவு ஆகியவை ஆகும். இக்கூறுகள் முறையே விவரிக்கப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழ் இலக்கிய வரலாற்றில் செய்யுள் வடிவமே முதலில் தோன்றியது (மார்த்தாண்ட பூபதி, 2012). தமிழர்கள் இலக்கண இலக்கியங்களோடு வாழ்ந்தனர் என்பதற்குச் சங்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. தமிழுக்குத் தாயகம் தமிழகம் என்றாலும் அயலகத்தில் குறிப்பாக மலேசியாவில் அதற்கு மிகப்பெரிய வாழ்வும் வரலாறும் உண்டு (முத்தமிழ்ச்செல்வன், 2000). தமிழ்மொழியானது தமிழர் வாழ்வு, கலை, இலக்கியம், மொழி, பண்பாடு என பல தரப்பட்ட வாழ்க்கை நெறிகளைக் கொண்டதாகும். அத்தகு தமிழர் வாழ்வில் இன்று பல ஏற்றத்தாழ்வுகள் நிகழ்ந்துவிட்ட போதிலும் புலம்பெயர்ந்து வாழும் மலேசியத் தமிழர்கள் தங்கள் மொழி, கலை, இலக்கியம், பண்பாட்டை மறந்துவிடவில்லை என்பதற்கு மலேசியக் கவிதை இலக்கிய வளர்ச்சி தக்க சான்றாக விளங்குகிறது (முத்தமிழ்ச்செல்வன், 2000). எழுத்தாளன் தான் சொல்ல விரும்புகின்ற கருத்துகளை நயமாகச் சொல்வதற்குப் பயன்படுத்தும் வலிமையான இலக்கிய வடிவம்தான் கவிதை.

கவிதை என்பது இன்பம் தருவது, உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது, நெறிமுறைகளைக் காட்டுவது, கலைக்கான படைப்பு என்றெல்லாம் சான்றோர்கள் கூறுவர். இக்கருத்துகளை ஆய்வுக்குட்படுத்தும் போது அதன் பன்முகத்தன்மை விளக்குகிறது. கவிதைக்கு இலக்கணத்தை வரையறுத்த வந்த நன்னூலார்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

"பல்வகைத் தாதுலி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்விலின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்"

(நன்னூல், சொல்லதிகாரம் : 268)

என்கிறார். இதன்கண் பலவகைச் சிறப்புகளோடும் உயிரும் உடம்பும் போல சொல்லும் பொருளும் அமையுமாறு கற்று வல்லோரால் அழகுற இயற்றப்பெறுவது செய்யுள் என்கிறார் நன்னூலார். இதனை எளிய சொற்களில் கூறவிழைந்த கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை,

"உள்ளத்துள்ளது கவிதை – இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் – உண்மை
தெரிந்து ரைப்பது கவிதை"

(கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை,1989)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

என்கிறார். இந்த எளிய கவிதையின் மூலம் கவிதை என்பது என்ன? என்பதற்கு விடை கூறுகிறார். உள்ளத்தில் உள்ளவற்றைத் தெளிவான தமிழில் இன்பம் கொடுக்கும் வகையில் உண்மையாகச் சொல்வதுதான் கவிதை என்பதை உணர்த்துகிறார்.

உணர்ச்சி, இசை போன்றவற்றை மேனாட்டு அறிஞர்கள் முன்னிலைப்படுத்துவதாகக் கூறும் முனைவர் கு. கணேசன் "நினைவும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சொல்லும் உணர்ச்சியைப் போர்த்து வெளிப்படும் பொழுதே கவிதை" என்று ஜான்ஸ்டுவர்ட் மில் என்பாரும், "இசையுடன் திளைப்பதே கவிதை" (கணேசன், 2012) என்று கார்லைனும் கூறுவதாகக் 'கவிதை கவிதையே' என்னும் நூலில் மேற்கோள் காட்டியுள்ளார்.

வள்ளுவரும் இளங்கோவும் கம்பரும், பாரதியும் நீடித்த புகழோடு நிலைத்து நிற்பதற்குக் காரணம் அவர்கள் தமிழ் உலகிற்கு வழங்கிய இலக்கணம் வழுவாத மரபு கவிதைகளின் மகத்துவம்தான். தனிமனிதர்களையும் அவர்கள் வாழும் சமுதாயத்தையும் ஊடுருவிப் பார்க்கும் வல்லமை படைத்தவர்கள் மட்டுமே மகத்தான கவிதைகளைப் படைக்க முடியும் (வரதராசன், 2011).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கவிதை என்பது ஒரு கலையாகும். கவிஞன் தான் பெறும் அனுபவங்களைக் கற்பனை நயத்துடனும், கருத்துச் செறிவுடனும் ஒலிநயம், உணர்ச்சி, இனிமை, எளிமை ஆகியவற்றைக் கலந்து கவிதை வடிவங்களாகத் தருகின்றான்.

கவிஞன் உருவாக்கப்படுவதில்லை, அவன் பிறப்பதுமில்லை, தோன்றுகிறான். " உளவியலின் சராசரித் தளங்களிலிருந்து மாறுபட்ட ஒரு மனோபாவத்திலிருந்து கவிஞன் தோன்றுகிறான். அந்த மனோபாவம்தான்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

முக்கியம் கவிஞனுக்கு மொழிகூட இரண்டாம் பட்சம்தான் (வைரமுத்து, 2011) என்ற கவிஞர் வைரமுத்துவின் கருத்துச் சிந்திக்கத்தக்கதாகும். கவிஞர்களின் மனம் செம்மையுறும்போது அவர்களின் கவிதையும் செம்மையுடையதாக அமையும்.

அவ்வகையில், மலேசிய நாட்டின் மரபு கவிஞரான செ.சீனி நைனா முகம்மது அவர்களின் படைப்பில் உருவான தேன்கூடு கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றிருக்கும் 265 கவிதைகள், இவ்வாய்வில் ஆய்வுப் பொருளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.2 ஆய்வுப் பின்னணி

க.பூரணச்சந்திரன், கவிதையியல் எனும் நூலில் இலக்கியத்தைக் கீழ்க்கண்டவாறு இயம்பியுள்ளார்.

> "இலக்கியம் மனிதனைப் பண்படுத்த உதவுகிறது என்ற கோட்பாடு பழங்காலம் முதலே உண்டு. இந்தியாவின், தமிழகத்தின் பிரதான கோட்பாடும் இதுதான். அறவியல் சிக்கல்களில் வாசகனை ஈடுபடுத்துவதன் வாயிலாக, அவனது ஒழுக்கத் தன்மையை உயர்த்தி முன்னேற்றுகிறது. மேலும், பிரச்சனைகளைத் தன்சார்பின்றி எடைபோட

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

> வைக்கிறது. ஆனால் நேரடியாக நீதிபோதனை, இலக்கியமாவதில்லை. தமிழிலும் கூட அறநூல்கள் பலவற்றை இலக்கியமாக ஏற்பதில் சிக்கல் உள்ளது. நேரடியாக அஃது இன்னாதது, இஃது இனியது என்று சொல்வது இலக்கியமாக முடியாது. அதற்கேற்ற அனுபவங்களை உருவாக்கித் தந்து அவற்றில் ஈடுபட வைத்து, அறிதலையும் மதிப்பிடுதலையும் சரியான விதத்தில் இணைக்கும் ஒரு கற்பனைச் செயற்பாட்டின் சுதந்திரமான, சார்பற்ற செயல்முறை மூலம் நாம் கட்டுப்பாடற்ற மனிதர்களாக உதவுகிறது இலக்கியம்"
>
> (பூரணச்சந்திரன், 2008: 26-27)

மு.வரதராசன், தமது 'இலக்கியத் திறன்' எனும் நூலில் இலக்கியத்தைக் கீழ்க்கண்டவாறு இயம்பியுள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

> 'ஒருமரத்தைப் பார்த்து இது நாற்படி உயரம் என்பது அறிவியல், இது வானளாவி உயர்ந்தது என்பது கலைவிண்ணை இடிக்கும் இமயம் என்றும் கூறுவர். விண் என்ற ஒன்று கிடையாது என்றும் இமயமலை சிகரம் விண்ணை இடிப்பது இல்லை என்றும் அறிவது அறிவியல்; அதாவது உள்ளதை உள்ளவாறு அறிவிக்கமுயல்வது அறிவியல். உள்ளதை உணர்ந்தவாறு உரைப்பது கலை. அறிவியல், உணர்ச்சியும் கற்பனையுமாக அமைவது கலை. இக்கலை பலவகைப்படும். ஓவியம், சிற்பம், இசை, இலக்கியம் போன்றவை கலை.
>
> (வரதராசன், 2011:15)

மனிதன் படைத்த நாகரிகக் கருவிகளுள் மிகச் சிறந்தது மொழி. ஆகவே, மனிதக்குலத்தின் வளர்ச்சிக்கு வாழ்வுக்கும் அடிப்படையான மொழி நனி சிறந்த

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நாகரிகக் கருவி எனலாம். அத்தகைய மொழியின் சொற்களை ஊடுபொருளாகக் கொண்டு அமைவது இலக்கியம். ஆகையால் அது கலைகளில் சிறந்தது என்பது பொருந்தும். இலக்கியம் சொற்களால் ஆனது; சில கலைகள் அவ்வப்போது தோன்றிப் பயனளித்து மறையக் கூடியன. ஆனால் இலக்கியம் நெடுங்காலம் வாழக்கூடியது. அதனால்தான் பழம்பெரும் இலக்கியங்கள் இன்றுவரை போற்றப்படுகின்றன (வரதராசன், 2011).

> தமிழ் இலக்கியம் தொன்மையானது; பண்பட்டது; வரலாற்றுச் சிறப்புடையது; என்று தோன்றி வளர்ந்தது என்று இயம்பமுடியாத அளவுக்குப் பழமையானது; பிற நாட்டினர் நாகரிக நிலையை எட்டாத காலத்திலேயே, தனக்குரிய கலப்பற்ற தூய இலக்கியப் போக்கினைக் கொண்டே இலங்கியது. எனவே, தமிழில் காணக் கிடக்குப் பழம்பாடல்களில் அக்கால இயற்கை அழகின் இனிமையும், மக்கள் வாழ்க்கை நெறியின் செம்மையும் புலப்படுகின்றன.
>
> (பாலசுப்பிரமணியம், 2011:17)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இலக்கியம் என்பது ஒரு நுண்கலை. ஓவியமும் சிற்பமும் கட்புலனாகக் கூடியன; இசை செவிப்புலனாக் கூடியது. அவற்றினும் நுட்பமாய்க் கருத்திற்கு மட்டுமே புலனாகக் கூடியது இலக்கியம். இத்தகைய நுண்ணியவற்றுள் எல்லாம் நுண்ணிதமான நுண்கலைக்கு வரலாறு எழுத முடியும் என்பது கடினமே. ஐம்புலன்களால் அறியக் கூடியவற்றை நம் இன்னும் பிரித்துக் தனித்துவைத்து

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நோக்க இடமிருக்கிறது. அதனால் அவற்றின் வரலாற்றைத் தனித்தும் சிந்திக்க வாய்ப்புண்டு. இலக்கியத்தை அங்ஙனம் பிரித்துத் தனித்து நோக்குதல் எளிதன்று. அதனால்தான் அதன் வரலாறு அதனைப் படைத்தவர்களோடும் நூல்களோடும் சேர்த்துவைத்தே நோக்கப்பட்டும் பின்னிப் பிணைத்தே எழுதப்பட்டும் வந்துள்ளது (தமிழண்ணல், 2014).

இலக்கியம் உண்மையும் அழகும் நிரம்பிய சொற்களால் வாழ்க்கையைப் பலப்படுத்துகிறது. அது மனிதனது ஆன்மாவையும், அவன் கருத்துகள், உணர்ச்சிகள், தலை நோக்கங்கள் முதலியவற்றையும், சொல் வடிவலே காட்டும் குறிப்பாகும். ஆன்மாவின் உண்மைச் சரித்திரமாக உள்ளது. அதுவே, அதன் சிறப்பு இயல்புகள் கலையழகும், குறிப்பாற்றலும், நிலைபேற்றுப் பண்புகளும் ஆகும் (வையாபுரிப்பிள்ளை, 2009).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இலக்கியம் மனிதனைச் செம்மைப்படுத்த வேண்டும்; பண்படுத்த வேண்டும் என்பதவே திருவள்ளுவரின் அறக்கருத்தாகும். இலக்கியம் என்றால் என்ன என்ற கேள்விக்கு விடயம் காண்பது எளிதான செயல் அல்ல. இலக்கியம் காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி. வாழ்க்கையின் விமர்சனம், வாழ்க்கையின் அனுபவக் கருவூலம் என்றெல்லாம் விளக்க முனைபவர்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பலருண்டு. இலக்கியம் என்பது புனையா ஓவியம். இலக்கியம் என்பது எழுத்து வடிவத்தில் வெளிப்படும் கலை என்றும் கூறுவர். எழுதப்பட்ட படைப்புகளின் ஒட்டு மொத்த தொகுப்பே இலக்கியம் என்பது மற்றுமொரு விளக்கமாகும் (ஞானசம்பந்தன்,1999).

இலக்கியக் கற்றலானது ஒரு சமுதாயத்தின் வாழ்க்கை முறையை அறியப் பயன்படும். அதோடு ஒரு காலக்கட்டத்தில் வாழும் மக்களின் பண்பாட்டைக் குறிக்கும் கருவியாகவும் அது திகழ்கின்றது. பெண், ஆண்களின் தன்மைகள், சிக்கல்கள் போன்றவற்றைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவும் இலக்கியம் இருக்கின்றது (Umar Junus, 1986).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இலக்கியமானது வாழ்க்கை நெறிகளை உருவாக்கும் தன்மையுடையது. இக்கூற்றினை உறுதி செய்யும் சான்றாக ஒவ்வொரு இலக்கியப் படைப்பும் சிறப்பாகப் படைக்கப்பட்டுள்ளது. அவ்விலக்கியம் இலக்கியவாதிகளின் வாழ்க்கையில் ஓர் அங்கமாகவே தென்படுகின்றது (Mohamad Taib Osman, 1977).

ஒவ்வொரு இலக்கியப் படைப்பும் முறையாகத் திட்டமிட்டும் புத்தாக்க முறையிலும் படைக்கப்படுகின்றது. இலக்கியப் படைப்புகள் மனிதர்களிடையே மறந்திருக்கும் கற்பனை ஆற்றலை வெளிக்கொணர்கிறது. மேலும், இலக்கியப்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

படைப்புகள் ஒவ்வொன்றும் ஒரு மனிதனுக்குத் தன்முனைப்பு அளித்த உயர்நிலைச் சிந்தனைவாதிகளாக உருமாற்றுகின்றது (Othman Putih, 1995). இலக்கியம் பல நற்பண்புகளைக் கொண்டுள்ளது. அவை இறை நம்பிக்கை, சமுதாயத் தொடர்பு, மனநிலை, சரித்திரம், அரசியல், கலாச்சாரம், பொருளாதாரம், கல்விக் கோட்பாடுகள் போன்றவையாகும். இலக்கியத்தில் கூறவரும் கருத்துகள் அதனை வாசிக்கும் மக்களின் மனநிலைக்கும் சிந்தனையாற்றலுக்கும் ஏற்ப வேறுபட்டிருக்கும் (Azman Wan Sik, 1981).

இலக்கியம் என்பது வெறும் பொழுதுபோக்கு அம்சம் அல்ல.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பொழுதுபோக்கிற்காக மட்டும் படைக்கப்படும் நூல்களைப் பற்றி நம் முன்னோர்கள் எண்ணவேயில்லை. ஏதோ ஒரு குறிக்கோளுடன் உருவம் பெற்றதுதான் இலக்கியம். இலக்கியம் எனும் சொல் பண்டைத்தமிழில் இல்லாமற் போனாலும் கூட தொல்காப்பியர் “செய்யுள்” எனும் சிறப்புப்பெயரால் சுட்டுகிறார். திருவள்ளுவரும் “நூல்” எனும் சொல்லை இலக்கியத்தைச் சுட்டப் பயன்படுத்தியுள்ளார்.

> நவில்தோறும் நூல்நயம் போலும் பயில்தோறும்
> பண்புடையாளர் தொடர்பு (திருக்குறள்: 783)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நூலின் நற்பொருள் கற்க கற்க அது மனதுக்கு மென்மேலும் இன்பம் தரும் அல்லது சலிப்புத் தட்டாது மேலும் தெளிவு ஏற்படுத்தும். இவ்வாறு கற்பதன் வழி மெய்ப்பொருள் அறிவதொடு வாழ்க்கை அனுபவத்தோடு ஒட்டி நல்வாழ்வு வாழப் பயன்படும் என்பது வள்ளுவரின் கருத்தாகும். ஆகியதால்தான் நூல்கள் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை நன்னூல் இவ்வாறு பகர்கிறது.

சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க்கு இனிமை நன்மொழி புணர்த்தல்

ஓசை உடைமை ஆழம் உடைத் தாதல்

முறையின் வைப்பே உலகம்மலை யாமை

விழுமியது பயத்தல் விளக்குய்தா ரணத்தது

ஆகுதல் நூலிற்கு அழகெனும் பத்தே (நன்னூல்:13)

என்னும் நன்னூல் நூற்பா விவரிக்கின்றது.

இலக்கியத்தின் உள்ளீடு பல வகையில் மாறுபட்டிருந்தாலும் அது நமக்குக் கொண்டு வந்து சேர்க்கின்ற கருத்தானது ஒன்று மட்டுமே. நம்முடைய உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படுத்தி வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகத் திகழ்வதேயாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.2.1 மலேசியத் தமிழ்க் கவிதை இலக்கியம்

மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் எழுத்து வடிவில் முதலில் தோன்றியது கவிதை இலக்கியம் (முரசு நெடுமாறன், 2007). தமிழகத்திலிருந்தும் இலங்கையிலிருந்தும் வந்து குடியேறியவர்களே தொடக்கக் காலத்தில் இங்குப் பத்திரிக்கைகளிலும் தனிப்பட்ட முறையிலும் கவிதை எழுதும் முயற்சிகளை மேற்கொண்டும் தொகுத்து நூல்களை வெளியிட்டும் உள்ளனர். 1887 இல் வெளிவந்த வண்ணை அந்தாதி, வண்ணை நகர் ஊஞ்சல், சிங்கைநகர் அந்தாதி, சித்திரக் கவிகள் ஆகிய சிற்றிலக்கிய நூல்கள் அடங்கிய தொகுதியே இங்கு வந்த முதல் கவிதை இலக்கியம் (முரசு நெடுமாறன், 2007).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆயினும், அதற்கு முன்பே 1886 இல், "சிங்கப்பூர் சித்தரக் கவி" எனும் சிறப்புப் பெயரைப் பெற்றிருந்த வி. நாராயணசாமி நாயகன் என்ற இசைப் புலவரால் இயற்றப்பட "இருந்தும் பயனென்ன" எனும் தலைப்புடைய இசைப்பாடலே, இங்கு இயற்றப்பட்ட முதல் தமிழ்க் கவிதையாகும் என்று சபாபதி (2000) குறிப்பிடுகிறார். எனினும், மரு. வேங்கடாசலம் பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்ற "ஆறுமுகப் பதிகம்" என்ற கவிதைத் தொகுப்பு நூலே மலேசியத் தமிழ்க்கவிதை இலக்கியத்தின் முதல் தொகுப்பு என்ற

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பெருமையைப் பெற்றுள்ளது என்று இராஜம் இராஜேந்திரன் (1998) குறிப்பிடுகிறார்.

1.2.2 தொடக்கக் காலக் கவிதை எழுதும் முயற்சிகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கவிதை எழுதும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்குள் மேலும் பல கவிதை நூல்கள் வெளிவந்தன. அவற்றுள் சுல்தான் மரைக்காயரின் "பதானந்த மாலை" (1890), மரு. வெங்கடாசலம் பிள்ளையின் "பினாங்குத் தண்ணீர்மலை வடிவேலன் மீது நவரத்தினமாலை" (1890), "முருகவேள் பஞ்சரத்தினப் பாமாலை" (1890), நா.வ இரங்கசாமியின் "அதிவினோதக் குதிரைப் பந்தய லாவணி (1893) என். வேலுப்பிள்ளையின் "சிங்கை முருகேசர் பேரில் பதிகம்" (1893), வே.ஆ. பொன்னுடாமிப்பிள்ளையின் "மன்மதன் திவ்விய சரித்திர அதியுல்லாச லாவணி' (1893), சுல்தான் மரைக்காயரின் "கீர்த்தனைத் திருட்டு" (1896) முதலானவை முக்கியத் தொகுப்பு நூல்களாகும் என்று சபாபதி (2000) குறிப்பிட்டுள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இங்ஙனம் 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி, 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை மலாயாவில் கவிதை இலக்கியம் நன்கு வளர்ச்சி பெற்றிருந்தது (முரசு நெடுமாறன், 2007). பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்குள் வெளிவந்த இக்கவிதைப் படைப்புகளைக் காணும்போது சில உண்மைகள் புலப்படுகின்றன. இக்கவிதைப் படைப்புகள் மிகுதியாகப் பத்தி, சமயம் ஆகியவற்றை முதன்மைப் பாடுபொருளாகவும் உள்ளீடாகவும் கொண்டு விளங்குகின்றன. அவ்வகையில் மலேசியாவின் தொடக்கக் காலத் தமிழ்க்கவிதைகளில் சமயச் சார்ந்த பாடுபொருளே மேலோங்கியிருந்தது எனலாம். இதனையடுத்தே நீதிநெறி, தனிமனித ஒழுக்கம், அறம் ஆகியவற்றை வலியுறுத்தும் போக்கு இக்கவிதைகளில் காணப்படுகின்றன. இக்கவிதைப் படைப்புகள் அந்தாதி, பதிகம், மாலை போன்ற மரபு இலக்கிய வகைகளையே அதிகம் கொண்டுள்ளன (சபாபதி, 2000).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இக்கவிதைப் படைப்புகள் தமிழகத்தின் தாக்கத்தினால் விளைந்தவை என்றாலும் மலேசிய நாட்டின் பின்னணியும் மண்ணின் மணமும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது (முரசு நெடுமாறன், 2007).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.2.3 இருபதாம் நூற்றாண்டின் தொடக்கமும் மலேசியத்தின் தமிழ்க்கவிதைகளும்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மலேசியத் தமிழ்க்கவிதைகளில் பத்தொன்பதாம் நூற்றாண்டுக் கவிதைகளில் மேலோங்கிக் காணப்பட்ட சமயச் சார்பு, அறமுரைக்கும் போக்கு, நீதிநெறி, தனிமனித ஒழுக்கம் ஆகியவற்றின் ஆதிக்கமே பாடுபொருளாக ஊடாடி செல்லுகின்ற நிலை காணப்பட்டது. இந்நிலை மலேசியத் தமிழ்க் கவிதைகளில் ஏறத்தாழ இந்நூற்றாண்டின் நாற்பது வரை நீடித்தது (பாஸ்கரன்,1981).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இந்நிலைக்குக் காரணம் அக்காலப்பகுதியில் இந்நாட்டுத் தமிழர்களுள் பெரும்பாலோர் இந்திய நாட்டைத் தாங்களின் தாயகமாகவும் இந்நாட்டைப் பிழைக்க வந்த பூமியாகவும் கருதியிருந்தனர். அதனால் இந்திய நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களின் மீது மிகுந்த அக்கறையும் ஆர்வமும் கொண்டு தீவிரக் கவனம் செலுத்தி வந்தனர். இந்தியா விடுதலை பெறவேண்டும் எனவும் அதற்காகப் போராடும் காந்தி தம் முயற்சியில் வெற்றிபெற வேண்டும் எனவும் இறைவனை வேண்டி வந்துள்ளனர். இதனையே அக்காலக்கட்டத்தில் படைக்கப்பட்ட கவிதைகளின் பாடுபொருளாகக் காணமுடிகின்றது (முரசு நெடுமாறன், 1998).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

முப்பதுகளில் வெளியான சில தொகுப்புகளின் கவிதைகளில், ஆளும் அரசைப் போற்றுவதும் வாழ்த்துவதும் காணப்படுகின்றது. ஆங்கிலேயர்கள் ஆளப்பிறந்தவர்கள் என்றும் அதற்கான தகுதி அவர்களுக்கே உண்டு என்பதும் அக்காலப் பகுதியில் இந்தியர்களின் மத்தியில் காணப்பட்ட சிந்தனையாகும். இச்சிந்தனை, கவிதை இலக்கியத்திலும் ஊடுருவியுள்ளதைக் காணமுடிகிறது (முரசு நெடுமாறன், 1998).

தந்தை பெரியார் மலாயா வந்து சென்றதன் விளைவாக 1930 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகளும் கொள்கைகளும் இம்மண்ணில் வேகமாகப் பரவத் தொடங்கின. இக்காலப்பகுதியில் பரவத்தொடங்கிய சீர்திருத்தப் போக்கு மலேசியத் தமிழ்க் கவிதைகளையும் பற்றிக்கொண்டு இடம்பெற தொடங்கின. இதற்கு வி.கே. வெங்கடாசல வாத்தியாரின் “கலிகால பசார் சிந்து (1936), பி. ஆறுமுகத்தின் “நவரச ஆனந்த சீர்திருத்தக் கீதமலர் (1936), கே.கிருஷ்ணனின் “மறுமலர்ச்சிப் பாடல்கள்” (1945) முதலான கவிதை நூல்களைத் தக்க சான்றுகளாகக் குறிப்பிடலாம் (சபாபதி, 2000).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1946 தொடங்கி 1956 வரையிலான காலக்கட்டம் மலேசியாவில் பிறந்த கல்வி கற்றுப் புதியவர்களும் எழுத்துலகிற்கு வந்த காலக்கட்டமாகும். இக்காலக்கட்டம் 100 விழுக்காடு மலேசிய உணர்வுகளைக் கொண்ட இலக்கியங்கள் உருவான காலமன்று. இதன் முதல் பகுதியில் பழைய சிந்தனைகளிலிருந்து முற்றாக விடுபடாமை தோன்றும். 1950 ஆம் ஆண்டிற்குப் பின்னரே மலேசியாவைப் பாடுபொருளாகப் கொண்ட படைப்புகள் தோன்றத் தொடங்கின. இதற்கு கோ. சாரங்கபாணி தம் தமிழ்முரசு நாளிதழ் மூலமும் தமிழர் திருநாள் மூலமும் எழுப்பிய சிந்தனைகளே அடித்தளமிட்டன. இந்நாட்டில் நிலைத்து வாழவேண்டுமென்ற உறுதியைச் சேர்த்தன. அவ்வுணர்கள் இலக்கியமாய் வடிவெடுத்தன. பண்பட்ட எழுத்துலகப் பெருமக்கள் புதியவர்களுக்கு வழிகாட்டி வளர்த்தனர். தமிழ்ப்பற்று, சமுதாய அவலம், எழுச்சி, பகுத்தறிவுச் சிந்தனை, இறைநலம், விடுதலை வேட்கை போன்ற உணர்வுகள் கொண்ட படைப்புகள் மலர்ந்தன. இக்காலப் பகுதியில் கவிதைத்துறை நன்கு வளர்ந்தது என்கிறார் (முரசு நெடுமாறன், 2007).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.2.4 விடுதலைக்குப் பிந்திய கவிதை இலக்கிய வளர்ச்சி

விடுதலைக்குப்பின் இலக்கியத் துறையில் குறிப்பாகக் கவிதைத் துறையில் ஏற்பட்ட எழுச்சி அதற்கு நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்ட

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எழுச்சியின் தொடர்ச்சியாகும். இந்த எழுச்சி 1970 ஆம் ஆண்டுகளின் இறுதிவரை நின்றது. இது மலாயா நாட்டின் கவிதைத்துறையின் பொற்காலமாகும் (முரசு நெடுமாறன், 1997).

தொடக்கக் காலத்தில் கவிதைத் துறையில் வழிகாட்டிய பெருமக்களில் குறிப்பிடத்தக்கவர்கள் பலர் உள்ளனர். சுவாமி இராமதாசர் பினாங்கில் புலமைமிக்க பலரை உருவாக்கினார்; தென்புலமான சிங்கப்பூரில் ஐ. உலகநாதன் ஓர் இலக்கிய அணியை வளர்த்துவிட்டார்; ஈப்போ வட்டாரத்தில் குறிஞ்சிக்குமரன் பலருக்கு வழிகாட்டினார். தலைநகரில் பைரோஜி நாராயணன், டி.வி. இராகவன் பிள்ளை போன்றோர் கவிதை வளர்ச்சிக்கும் கவிஞர் உருவாக்கத்திற்கும் வழகாட்டினர். கா.பெருமாள், பனைக்குளம் மு. அபுதுல் மஜீது, அ.முத்தையன் போன்றோர் பலருக்குக் கவிதை உணர்வூட்டி வளர்ச்சிக்குத் துணை நின்றனர்(முரசு நெடுமாறன்,1997).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இவர்களின் வழிகாட்டலில் பல மரபு கவிஞர்கள் மலாயாவில் தோன்றினர். அவர்களில் முன்னிலை வகுத்தவர்கள், கரு. வேலுச்சாமி, சங்கு சண்முகம், வீரமான், காரைக்கிழார், சீனி நைனா முகம்மது, தீப்பொறி. பொன்னுசாமி, எல்லோன் போன்றோர் ஆவர் (முரசு நெடுமாறன், 2007).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அவ்வரிசையில் தோன்றிய சீனி நைனா முகம்மது என்ற மரபு கவிஞரின் கவிதைத் தொகுப்பான 'தேன்கூடு' மலேசியத் தமிழச் சமூகத்தில் அவ்வவ்போது நிகழும் சிக்கல்களையும் தீர்வுகளையும் பாடுபொருளாகக் கொண்டு படைக்கப்பட்ட ஒரு கவிதைத் தொகுப்பாக விளங்கிற்று.

1.2.5 *சீனி நைனா முகம்மது*

கவிஞரின் படைப்பை மதிப்பிட அவருடைய வாழ்க்கை குறித்த தரவுகளும் தேவையாகும். சீவி நைனாமுகம்மதுவின் தேன்கூடு கவிதைத் தொகுப்பு ஆராயும் முன் கவிஞரின் வாழ்க்கையையும் கவிதைகளில் அவரது ஈடுபாடு குறித்த செய்திகளையும் தரவேண்டும் எனும் நோக்கில் அவருடைய வாழ்க்கை பதிவு இங்குப் பதிவிடப்படுகிறது.

செ. சீனி நைனா முகம்மது தமிழ்நாட்டில், சிவகங்கை மாவட்டம் இளையான்குடியைச் சார்ந்த கீழாயூர் என்ற கிராமத்தில் 11.9.1947 இல் பிறந்தார். சீனி நைனா முகம்மது, திருவாளர் செய்யது ஆலம், திருமதி இபுராகிம் பீவி தம்பதியினருக்குத் தவப்புதல்வனாய்த் தலைமகனாய்ப் பிறந்தார். இவருடன் பிறந்தவர்கள் மொத்தம் எழுவர். அவர்களில் மூவர் சகோதரர்கள் நால்வர் சகோதரிகள் (ஃபிதாவுல்லாஹ் கான் 2014).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இவர் தொடக்கக்கல்வியைக் கீழாயூர்க் கிராமத்தில் உள்ள கீழாயூர்த் தொடக்கப்பள்ளியிலும் எட்டாம் வகுப்புப் படித்துக்கொண்டிருக்கும் வேளையில் மலாயாவிற்கு வந்ததால் தம்முடைய கல்வியைக் கோலாலம்பூரில் அமைந்திருக்கும் தனியார் பிற்பகல் பள்ளியிலும் (*Methodist Afternoon school)* தொடர்ந்தார். ஆறாம் ஆண்டு கல்வியை முடித்தபின், தொடர்ந்து அப்பள்ளி வளாகத்தில் அமைந்திருக்கும் நடுநிலைப்பள்ளியில் படிவம் மூன்று வரை கற்று, எல். சி. இ (*Low Certificate of Education)* என்ற அரசு தேர்வில் முதல் பிரிவில் தேர்ச்சியைப் பெற்றார். இதன் காரணமாக, இவருக்கு அரசாங்கப் பள்ளியிலேயே கல்வி கற்க வாய்ப்புக் கிடைத்தது (மனோன்மணிதேவி. அ,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2015). கோலாலம்பூரில் உள்ள மேக்சுவெல் சாலை உயர்நிலைப் பள்ளியில் (*Maxwell Road School)* தமது நான்காம் ஐந்தாம் படிவ கல்வியை நிறைவு செய்தார். ஐந்தாம் படிவத்தில் சீனியர் கேம்ரீட்சு என்ற அரசாங்கத் தேர்வில் சிறந்த தேர்ச்சி பெற்றார். தந்தையின் ஆலோசனைக்கு இணங்கி, தமது மேற்கல்வியைத் தமிழகத்தில், திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் தொடர்ந்தார். மருத்துவராக வரவேண்டும் என்ற கனவுகளுடன் புகுமுக வகுப்பில் (*Pre – University Course)* அறிவியல் பிரிவில் சேர்ந்தார். இரண்டு ஆண்டுகள் கற்றுத் தேர்ந்தப் பின்னர், மருத்துவக்கல்விக்கு விண்ணப்பித்தார். ஆனால், பொருளாதாரக் காரணத்தால் அக்கல்வியைத் தொடரமுடியாமல்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

போனது. அறிவியல் துறையே மனம் நாடியதால், அதே கல்லூரியில் இராசாயணத் துறையை (*Bsc. Chemistry)* மனுசெய்தார். காலம் கடந்து விண்ணப்பித்ததால் அத்துறையில் வாய்ப்புக் கிடைக்கவில்லை. வேறு வழியில்லாமல் அக்கல்லூரியில் இளங்கலை ஆங்கில இலக்கியம் கற்றார் (மனோன்மணிதேவி, 2015).

அத்துறையை மனம் நாடாததால் இரண்டாம் ஆண்டு, கல்வியைப் பாதியிலேயே நிறுத்திவிட்டு, மலேசியாவிற்கு வந்தார். குடும்பச்சூழலின் காரணமாக இங்கேயே தங்கிவிட்டார். அத்தோடு தன் கல்விக்கும் முற்றுப்புள்ளி

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வைத்தார்.

1.2.5.1 தமிழ்க்கல்வி

சீனி நைனா முகம்மது தமது தமிழ்க்கல்வியை முறையாக ஆசிரியரிடம் பயின்றது தமிழகத்தில் எட்டாம் வகுப்பு வரைதான். மலேசியாவில், பள்ளிகளில் தமிழ்மொழியைக் கற்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைக்கவில்லை. இருப்பினும் தான்னார்வத்தினாலும் தமிழ்மொழியின் மீது கொண்ட ஆழ்ந்த ஆவலாலும் தமிழ் இலக்கண இலக்கியங்களைச் சுயமுயற்சிக் கொண்டு கற்றுத்தேர்ந்தார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இந்தத் தமிழறிவைக்கொண்டு, எல்.சி.இ (*Lower Certificate Education)* என்ற அரசாங்கத்தேர்விலும் சீனியர் கேம்ரீட்சு என்ற இறுதித் தேர்விலும் தமிழையும் தமிழிலக்கியத்தையும் தேர்வுக்கு எழுதினார். இவ்விரண்டு தேர்விலும் ‘எ’ மதிப்பெண்களைப் பெற்றார். தமிழ்மொழி மீதுள்ள காதலே எந்நேரமும் தம்கையில் தொல்காப்பிய நூலை ஏந்தச்செய்தது. இதுவே பின்னாளில் அவரைத் தொல்காப்பியத்தில் சிறந்த புலமை பெற்றவராகிற்று எனலாம் என்கிறார் (ஃபிதாவுல்லாஹ் கான் 2014).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.2.5.2 தொழில்

சீனி நைனா முகம்மது தமது 20 ஆம் அகவையில், கோலாலம்பூரில் உள்ள உபைதுல்லா அன் கம்பனி என்ற கப்பல் நிறுவனத்தில் பணி புரிந்தார். பின்னர் தமது 24 ஆம் அகவையில் மரைக்காண் என்ற நூல் வெளியீடும் விற்பனையும் செய்யும் நிறுவனத்தில் பணிக்கு அமர்ந்தார். அங்குத் தொழில் நெழிவு சுளிவுகளைக் கற்றார். பின்னர், தமது 27 ஆம் அகவையில் கெடா மாநிலத்தின் தலைநகரான அலோர்ஸ்டாரில், ஒரு நிறுவனத்தைத் தோற்றுவித்து அதன் உரிமையாளர் ஆனார். ஆறு ஆண்டு கழித்துப் பினாங்கில் ஓர் அடுக்குமாடி குடியிருப்பப் பகுதியில் மளிகைக்கடையைத் திறந்தார். மூன்று ஆண்டுகளுக்குப்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பிறகு, சிங்கையில் நாணயம் மாற்றும் நிறுவனத்தில் வேலை செய்தார். அங்குக் கண்ணும் கருத்துமாக வேலை ஆற்றுவதையறிந்த அந்நிறுவனத்தார் அவரைக் கனடாவில் உள்ள தங்கள் கிளை நிறுவனத்தை நிருவகிக்க அழைத்தனர். அவ்வேலையை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக, தமது எண்ணமெல்லாம் பத்திரிக்கைத் துறையிலும் எழுத்துத் துறையிலுமே வட்டமிட்டதால் சிங்கப்பூரில் பணிபுரிந்த வேளையில் சேர்த்து வைத்தப் பணமான ஓர் இலட்சம் மலேசியா ரிங்கிட்டைக் கொண்டு, உங்கள் குரல் எனும் மாத இதழை நடத்தத் தொடங்கினார். 1997 ஆம் ஆண்டு நவம்பர் மாதம், முதல் உங்கள் குரல் இதழை வெளியிட்டார். அவ்விதழ் வழியே சீனி நைனா முகம்மது அவரின் தமிழ்ப்பணி இனிதே தொடங்கியது என்கிறார் (நேர்காணல்: கமலா).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.2.5.3 கவிதை ஈடுபாடு

இளமை முதற்கொண்டே சீனி நைனா முகம்மதுவிற்குக் கவிதை புனைவதில் ஆர்வம் இருந்தது. சான்று,

அண்ணல் முகம்மது வாழ்கவே
அலைகி வசல்லம் வாழ்கவே

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆமினா வயிற்றில் பிறந்த – அபுதுல்லாவின்
அருமை புதல்வர் வாழ்கவே!

(சீனி நைனா முகம்மது,2014,ப: 9)

இக்கவிதை 1958 ஆம் ஆண்டு சீனி நைனா முகம்மது தமது 11 ஆம் அகவையில் " மண்ணுக்கு மரம் பாரமா" என்ற திரைப்பாடல் மெட்டில் முதன்முதலாகப் புனைந்த பாடல்வரிகள் இவை எனக் கூறுகிறார் (நேர்காணல்: கமலா). யாப்பிலக்கணம் குறித்து ஏதும் அறியாத பருவத்தில் இவர் எழுதிய இக்கவிதையானது எதுகை, மோனை ஆகிய அனைத்தும் பொருந்தி அமைந்திருந்ததை வைத்துப் பார்க்கும் போது இஃது இறைவன் அவருக்கு அளித்த அருட்கொடையே என்கிறார் (மனோன்மணிதேவி, 2015; நேர்காணல்: கமலா).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.2.5.4 தொடக்கக் கால எழுத்துலக ஈடுபாடு

மலேசியாவில் இருக்கும் போது, சீனி நைனா முகம்மது அவர்களின் எழுத்துலகப் பயணம், கவிதைகள் எழுதுவதின் வழியேதான் முதலில் தொடங்கியது. தமிழ் முரசு எனும் நாளிதழில் சீனி நைனா முகம்மது முதன்முதலில் எழுதிய "மழையின் சிறப்பு" எனும் வெண்பா வெளிவந்தது (தேன்கூடு, 2014). தொடர்ந்து, கோல்டு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

டாலர் டீ என்ற நிறுவனமும் சம் இப்லியோங் என்ற காலணி நிறுவனமும் இணைந்து நடத்திய சிங்கப்பூர் வானொலி நிகழ்ச்சிக்குப் பாடல் ஒன்று அனுப்பினார். சீனி நைனா முகம்மது எழுதி அனுப்பிய சுலோகத்திற்கு, ஒரு பவுனும் ஒரு சோடி காலணியும் பத்து மலேசிய ரிங்கிட்டும் பரிசாகக் கிடைத்தது. இந்நிகழ்ச்சி இவரது எழுத்துலக ஈடுபாட்டுக்கு உந்து சக்தியாக அமைந்தது(நேர்காணல்: சு.கமலா).

பள்ளிப் படிப்பு முடிந்தப்பின், கவிதை எழுதுவது எப்படி? என்று, கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில், புத்தகம் தேடி அலைந்தவருக்கு, விசாகப் பெருமாள் ஐயர் இயற்றிய யாப்பிலக்கணம் என்ற நூல் கிடைத்தது. பழைய நடையில் இருந்த அப்புத்தகத்தை அகராதியின் துணைகொண்டு விடாமுயற்சியுடன் கற்றுத்தேர்ந்தார். அதன்பின்னர் இவர் எழுதிய முதல் கவிதை, ஆசிரிய விருத்தத்தில் புனையப்பட்ட பொல்லாத நோய் என்ற தலைப்பிட்ட கவிதையாகும் (தேன்கூடு, 2014). இக்கவிதை, ஞாயிறு மலர் நாளிதழில் வெளியாகியது என்கிறார் (நேர்க்காணல்: கமலா).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.2.5.5 இதழியல் பணியும் பொதுபொறுப்புகளும்

1980 ஆம் ஆண்டு தொடங்கி 1986 ஆம் ஆண்டு வரை பெர்மிம் தேசிய நிறுவனத்தின் நம் குரல் என்ற சமுதாய இதழ் ஆசிரியராக ஏழு ஆண்டுகள் பணியாற்றினார். 1997 ஆம் ஆண்டு தொடங்கி 2014 ஆம் ஆண்டு ஆகத்து மாதம் வரை, உங்கள் குரல் இதழாசிரியராகப் பணியாற்றினார். சித்தரா வாசுவின் சிந்தனைச் சிற்பமாக வெளிவந்த எங்கள் பார்வையில் டத்தோ ஸ்ரீ என்ற புத்தகத்தின் தமிழ்ப்பதிப்புக்கு முதன்மை ஆசிரியராகவும் பணியாற்றினார். இப்புத்தகம் 2007 11ஆம் ஆண்டு இரண்டு மொழியில் அதாவது தமிழ்மொழியிலும் ஆங்கிலமொழியிலும் வெளியீடு கண்டது (நேர்க்காணல்: கமலா).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1970 ஆம் ஆண்டு தொடங்கி 1974 ஆம் ஆண்டுவரை தமிழ் இலக்கியக் கழகத்தின் துணைத்தலைவராகப் பொறுப்பேற்றார். 1978 ஆம் ஆண்டு தொடங்கி 1982 ஆம் ஆண்டுவரை, பெர்மின் (*PERMIN)* என்ற தேசிய நிறுவனத்தின் செயலராகப் பொறுப்பேற்றார். பின், 1982–1986 வரை உதவித்தலைவராகப் பொறுப்பேற்றார். 1988 மலேசியாவில், பினாங்கு மாநிலத்தில் வெளிவந்த மலேசிய நண்பன் நாளிதழ்ச் செய்தி ஆசிரியராவார் என்கிறார் (மனோன்மணிதேவி, 2015).

.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1993 ஆம் ஆண்டு முதல், மலேசிய வானொலி, தொலைக்காட்சிகளில் கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், வானொலி விளக்கம், தொடர் இலக்கிய உரை, விடியல் வெளிச்சம் எனும் தலைப்பில் சமய உரைகளை ஆற்றினார். மேலும், தகவுரைஞராகப் பினாங்குத் தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்கும் மலேசியத் தமிழ் இலக்கிய ஆசிரியர் கழகத்திற்கும் ஈப்போ குறிஞ்சித்திட்டுக் கழகத்திற்கும் பணியாற்றினார். 2011 ஆம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற உலக இசுலாமியத் தமிழ் இலக்கியப் பகுதிப்பொறுப்பாளராகவும் பணிபுரிந்துள்ளார் என்கிறார் (நேர்காணல்: கமலா).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.2.5.6 இலக்கியம்/மொழி வளர்ச்சியில் பங்கு

கீழ்க்காணும் அட்டவணை1.1 இல் சீனி நைனா முகம்மதுவின் இலக்கியம்/மொழி தொடர்பான பங்கு சுருக்கமாக விளக்கப்படுத்தப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவணை 1.1

இலக்கியம்/ மொழி பங்கு

எண்	இலக்கியம்/மொழி
1	உங்கள் குரல் இதழ் திண்ணைப்பள்ளி (இலக்கண இலக்கியக் கேள்விகளுக்குப் பதில்)
2	உங்கள் குரல் இதழ் ஊடகத்தில் வாடும் தமிழ் (தமிழ் நாளிதழ்களில் காணப்படும் பிழைகளும் திருத்தங்களும்)
3	தொல்காப்பிய வகுப்புகள்
4	உங்கள் குரல் இதழ் தலையங்கம்
5	தமிழ் வகுப்புகள்
6	திருக்குறள் வகுப்புகள்
7	இலக்கண விளக்கப் பட்டறைகள்
8	கவிதைப்பட்டரைகள்
9	கலைச்சொல்லாக்கம்
10	இலக்கியச் சொற்பொழிவுகள்
11	வானொலி உரை
12	மலேசிய மக்களுக்குத் தமிழ் வாழ்த்துப்பாடல் உருவாக்கம்
13	மலேசிய மக்களுக்குப் பொங்கல் வாழ்த்துப்பாடல் உருவாக்கம்.
14	மலேசிய தமிழ் இலக்கியக் கழகத்தின் கொள்கைப்பாடல் உருவாக்கம்.
15	தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகத்துடன் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் இணைந்து நடத்திய தமிழ்க் கவிதைச் சான்றிதழ்ப் பயிற்சி நடத்துநர் (2014).

(மூலம்: மனோன்மணிதேவி, 2015, எடுத்தாளப்பட்டது)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.2.5.7 படைப்புகள்

கீழ்க்காணும் 1.1 வரைபடத்தில் சீனி நைனா முகம்மதுவின் படைப்புகளான படைப்பு நூல், தொகுப்பு நூல், சிப்பம்(modual), மாநாட்டுக் கட்டுரைகள் போன்ற படைப்புகளைச் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது.



வரைபடம் 1.1. படைப்புகள் மூலம்: மனோன்மணிதேவி (செ.சீனி நைனா முகம்மது), 2015

05-4506832 pustaka.upsi.edu.my PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேற்காணும் வரைபடம் தேன்கூடு கவிஞர் படைத்த படைப்புகளைக் காட்டுகிறது. இவர் நான்கு விதமான படைப்புகளைப் படைத்துள்ளார்.அவை, நூல், தொகுப்பு நூல், சிப்பம், மாநாட்டுக் கட்டுரை/ ஆய்வுக்கட்டுரை ஆகும்.

1.2.5.7.1 படைப்புகள்- உங்கள்குரல் இதழில் எழுதிய கருத்துக்கட்டுரைகள்

கீழ்க்காணும் 1.2 வரைபடம் சீனி நைனா முகம்மது தமது உங்கள்குரல் இதழில் எழுதிய கருத்துக்கட்டுரைகளைச் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



வரைபடம் 1.2. படைப்புகள்- கருத்துக் கட்டுரைகள் (1). மூலம்: மனோன்மணிதேவி (செ.சீனி நைனா முகம்மது), 2015

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.2.5.7.2 உங்கள் குரல் இதழில் கருத்துக்கட்டுரைகள்

கீழ்க்காணும் 1.3 வரைபடம் சீனி நைனா முகம்மது தமது உங்கள்குரல் இதழில் எழுதிய கருத்துக்கட்டுரைகளைச் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வரைபடம் 1.3. படைப்புகள் - கருத்துக் கட்டுரைகள் (2). மூலம்: மனோன்மணிதேவி (செ.சீனி நைனா முகம்மது), 2015

1.2.5.8 பெற்ற விருதுகள்

2007 ஆம் ஆண்டு, உலகத் தமிழர் மையம் சென்னையில் திரு. ஔவை நடராசன் தலைமையில் நடத்திய வரவேற்பு நிகழ்ச்சியில் இறையருட்கவிஞர் எனும் பட்டம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வழங்கப்பட்டது. மேலும், 2007 ஆம் ஆண்டு, சென்னைத் தமிழ்ச்சுரங்கமும் தமிழ்ப்பண்பாட்டுமையமும் இணைந்து, தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார் தலைமையில், தொல்காப்பிய ஞாயிறு விருது வழங்கப்பட்டது. அடுத்து, 2014 ஆம் ஆண்டு, பிப்ரவரியில் தமிழ்நாட்டில் கும்பகோணம் நகரில் கவிக்கோ அப்துல் ரகுமான் தலைமையில் நடைபெற்ற எட்டாவது அனைத்துலக இசுலாமிய இலக்கிய மாநாட்டில் இலக்கியச் சுடர் விருதும், 10,000 ரூபாய் பொற்கிழியும் வழங்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டார் என்கிறார் (இராஜேந்திரன், 2014).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.2.5.9 பெற்ற பரிசுகள்

2012 ஆம் ஆண்டு, தேன்கூடு என்ற இவரது கவிதைத் தொகுப்பு நூல், ஐந்து ஆண்டுகளில் வெளிவந்த சிறந்த கவிதை நூலுக்கான, மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தான்ஸ்ரீ மாணிக்கவாசகம் புத்தகப்பரிசை வென்றது. மேலும் மலேசியப் பிரதமர் துன் அப்துல்லா அகம்மது படாவி அவர்களின் கையில் தங்கப்பதக்கம் பெற்றார் என்கிறார் (இராஜேந்திரன், 2014).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.2.5.10 மறைவு

சீனி நைனா முகம்மது அவர்கள், 7.8.2014 இல், மாரடைப்பால் இறைவனடி சேர்ந்தார். இவரது மறைவு மலேசியத் தமிழச் சமூகத்திற்குகே பேரிழப்பாக அமைந்தது.

1.2.5.11 தேன்கூடு கவிதைத் தொகுப்பு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தேன்கூடு கவிதைத் தொகுப்பு, சீனி நைனா முகம்மதுவின் ஒரே தொகுப்பு. இத்தொகுப்பில் 1958ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டுவரை இவர் எழுதிய 265 கவிதைகள் உள்ளன. அனைத்தும் பல்வேறு பாடுபொருளைச் சார்ந்து பதினொரு துணைத் தலைப்புகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. 320 பக்கங்களைக் கொண்ட இக்கவிதைத் தொகுப்பு நூலைப் பினாங்கு மாநிலத்தில் அமைந்துள்ள தம்முடைய நிறுவனமான உங்கள் குரல் எண்டர்பிரைசு மூலம் வெளியிட்டுள்ளார். இதன் முதல் பதிப்பு 2011 ஆம் ஆண்டும் இரண்டாம் பதிப்பு 2014 ஆம் ஆண்டும் வெளியீடு கண்டது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

முடிவாக, திறானாய்வு உலகில் வாழ்க்கையையும் படைப்பையும் இணைத்து மதிப்பிடும் போக்குக் காணப்படுகிறது. குறிப்பிட்டச் சில கவிதைகளில் உள்ள நிலைப்பாடுகளைப் புரிந்துகொள்ள வாழ்க்கையில் கவிஞரின் இலக்கியக் கொள்கை, வாழ்க்கை குறித்த நோக்கு முதலியவற்றை கவிஞர் எழுதிய படைப்புகளில் இருந்து புரிந்துகொள்ள அவரது வாழ்க்கை அனுபவங்கள் இவ்வாய்வுக்கு உறுதுணையாய் அமைகின்றன.

1.3 ஆய்வுச் சிக்கல்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அதாவது பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், கரும்பு, காப்பி, ரப்பர் தோட்டங்களில் வேலை செய்வதற்கு இந்தியத் தொழிலாளர்கள் மலேசிய நாட்டிற்குக் கொண்டு வரப் பட்டனர் (சாமிக்கண்ணு, 2014). அவர்களில் சஞ்சிக்கூலிகளாக ஆங்கிலேயர்களால் கொண்டு வரப்பட்டவர்களில் முதன்மை நிலையில் இருந்தவர்கள் தென்னிந்தியத் தமிழர்கள் ஆவர் (ஜானகிராமன் மாணிக்கம், 2006). மலாயாவில் தோட்டங்களிலும் இதர உடலுழைப்புத் துறைகளிலும் தொழிலாளர்களாக வேலை செய்வதற்குத் தென்னிந்திய தமிழர்களைக் காலணித்துவ ஆட்சியாளர்களான ஆங்கிலேயர்கள் இங்குக் கொண்டுவந்ததற்கு பல்வேறு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

காரணங்கள் இருப்பதாகச் சமூக ஆய்வுத்துறைப் பேராசிரியர் சிந்து இவ்வாறு கூறுகிறார்.

> ‘தமிழர்களுடைய இனவேறுபாடுகளும், சொந்த தன்னம்பிக்கையற்ற தன்மையும், அடிமைத்தனமாக வாழ வேண்டும் என்ற உணர்வுகளும் அவர்கள் ஆளுமைப்படுத்தின.’
>
> (சிந்து, 2016:171-183)

மேலும், ஐரோப்பிய விவசாய உற்பத்தியாளர் ஒருவர் தமிழர்களைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்:-

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

> ‘இந்திய பிரிட்டிஷ் காலணித்துவ ஆட்சி முறை மலாயாவிலும் பின்பற்றுவதால் தமிழர்களை நிருவகிப்பது மிகவும் சுலபமாகும்’
>
> (Tinker,Hugh,1974)

எப்போதும் எதையும் எதிர்த்து நடக்காதவர்களாகவும், கடுமையான உழைப்பாளர்களாகவும் தமிழர்கள் இருந்தனர். ஊதிய விடயத்தில் பேரம் பேச முடியாதவர்களாக அவர்கள் இருந்தது, முக்கியமாக அவர்கள் ஒற்றுமை இல்லாதவர்களாக இருந்தது ஆங்கிலேயருக்கு மிகவும் சாதகமாக இருந்தது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இந்நிலையே ஆங்கிலேயர்கள் இவர்களைத் தேர்வு செய்தமைக்குக் காரணமாக விளங்கியது (ஜானகிராமன் மாணிக்கம், 2006).

கூலிகளாகக் கொண்டுவரப்பட்ட தமிழர்கள் கடுமையாக வேலை வாங்கப்பட்டு அடிமைகளைப்போல நடத்தப்பட்டுள்ளனர். காடுகளை அழிக்கவும் ரப்பர் தோட்டங்களை உருவாக்கவும் சாலைகள் போடவும் இரயில் தண்டவாளங்களை அமைக்கவும் இவர்கள் பயன்படுத்தப்பட்டனர் (மாயதேவன், 1968).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அவ்வேளையில், பாம்புக்கடி, மலேரியா கொசுக்களின் தாக்குதல், காலரா நோய், இரத்தப் பேதி முதலான பல்வேறு கடுமையான நோய்களாலும் உணவு பற்றாக்குறையினாலும் அதிக வேலைப்பளுவின் காரணமாகவும் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட தமிழர்கள் இறந்துவிட்டனர் (ஜானகிராமன் மாணிக்கம், 2006).

1905 ஆம் ஆண்டு தொடக்கம் முதல் 1946 ஆம் ஆண்டுவரை இந்தியாவில் இருந்து தொடர்ந்து மலாயாவிற்குத் தென் இந்தியத் தொழிலாளர்கள் தொடர்ந்து வந்துள்ளனர். இந்தக் காலக்கட்டத்தில் வயிற்றுப் பிழைப்புக்காக வந்தோம்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பின்னர், தாயகம் திரும்பி விடுவோம் என்ற எண்ணமே அவர்களிடம் இருந்தது (ஜானகிராமன் மாணிக்கம், 2006).

விடுதலைக்குப்பின் நாடு பல்வேறு துறையில் மெல்ல மெல்ல வளர்ச்சி கண்டதால் மலேசியத் தமிழர்களின் இந்நிலை கொஞ்சம் கொஞ்சமாக மாற்றம் கண்டது. தமிழர்களின் வாழ்க்கைக்கான எதிர்ப்பார்ப்புகள் அதிகரித்துக் கொண்டே சென்றன். இங்கே குடியுரிமை பெற்று வாழ்க்கையில் வெற்றிபெற எண்ணம் கொண்டனர் (ஜானகிராமன் மாணிக்கம், 2006).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இருப்பினும், இவர்களது வாழ்வில் போராட்டங்களும் சமுதாயச் சிக்கல்களும் குறைவின்றிப் பின் தொடர்ந்தன. அச்சமுதாயச் சிக்கல்களையும் தமிழர்களின் வாழ்வியல் நிலைகளையும் துல்லியமாக விளக்கும் வகையில் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் உரைநடைவடிவில் பரவலாகக் குறிப்புகள் காணப்படவில்லையென்பது அனைவரும் ஏற்றுக்கொண்ட ஒரு சிக்கலாகும். இருப்பினும், நாட்டுப் புறப்பாடல்களும், தமிழ்க் கவிதைகளும் மலேசியத் தமிழச் சமுதாயத்தை நன்கு படம் பிடித்துக் காட்டியுள்ளதை அறியமுடிகிறது (இராமையா,1996). அக்கவிதைகளில் காட்டப்பட்டுள்ள தமிழச் சமூகத்தின் சிக்கலையும் உண்மைத்தன்மையும் ஆராயப்படவேண்டிய நிலையிலேயே இருக்கின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சமுதாய வளர்ச்சிக்கு இலக்கியம் காலங்காலமாக உற்றத் துணையாக இருந்த வந்துள்ளது எனலாம். சமுதாயத்தில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளையும் அவலங்களையும் பெருமைகளையும் சுட்டிக்காட்டி வந்துள்ளதோடு அவற்றுக்கேற்ப கண்டித்தும் பாராட்டியும் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. காலங்காலமாக இலக்கியம் மக்களொடு தொடர்பு கொண்டே இருந்து வருகிறது.

இலக்கியம் என்பதனை ஒரு சமுதாய வாழ்வின் வரைபடம் எனலாம். அவ்வரைபடத்தின் துணைகொண்டு அதனைப் படைத்த சமூகம் நடந்து வந்த பாதையை, அதன் உள்கிடக்கை, படைப்புத் திறனை, சிந்தனை விரிவை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

உணர்ந்துகொள்ள இயலும் என்று கூறுகிறார் (முரசு நெடுமாறன் 2007). அவ்வகையில், கவிதைகளை ஊடகமாகப் பயன்படுத்தி கவிஞர்கள் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டியுள்ளமையால், இவ்வாய்வேடு, மலேசியத் தமிழர்களின் சமுதாயத்தை இக்கவிதைவழி இச்சமுகத்தில் காணப்படும் சிக்கல்களை ஆராயவும் தேன்கூடு கவிதைத் தொகுப்பு ஆவணமாகக் கொள்ளப்பட்டது. மேலும் கவிதைகளில் காணப்படும் சமூகம் குறித்தப் படைப்புருவாக்கக் கருத்தாக்கங்களை ஆராய்தல் அவசியமாகக் கருதப்படுகிறது. காரணம், மலேசியப் புதுக்கவிதைகளை ஆராய்ந்த பழனி கிருட்டிணசாமி (2011) என்ற ஆய்வாளர், ஆய்வின் முடிவில் மலேசியத்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழ்க்கவிதைகளில் சமுதாயத்தில் பெண்களின் உண்மை நிலவரங்கள் நிறைவாகக் கூறப்படவில்லை என்றும் கவிதை நயத்திற்கே கவிஞர்கள் முக்கியத்துவம் வழங்கியுள்ளனர் என்றும் கூறியுள்ளார். எனவே, மேற்கூறப்பட்ட இவ்வகையான சிக்கல்களை ஆராய்ந்து களையும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

1.4 ஆய்வு நோக்கம்

இவ்வாய்வானது நான்கு நோக்கங்களைக் கொண்டுள்ளது. அவை பின்வருமாறு:

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1. தேன்கூடு கவிதைத் தொகுப்பில் காணப்படும் மலேசியத் தமிழச் சமூகச் சாயல்களை அடையாளம் காணுதல்.
2. தேன்கூடு கவிதைத் தொகுப்பில் காணப்படும் மலேசியத் தமிழச் சமூகச் சிக்கல்களைப் பகுத்தாய்தல்.
3. தேன்கூடு கவிதைத் தொகுப்பில் காணப்படும் மலேசியத் தமிழச் சமூகப் படைப்புருவாக்கக் கருத்தாக்கங்களை விளக்குதல்.
4. தேன்கூடு கவிதைத் தொகுப்பில் காணப்படும் மலேசியத் தமிழச் சமூகத்தில் நிலவும் சிக்கல்களை வெளிக்கொணர பயன்படுத்தபட்ட உத்திகளைப் பகுத்தாய்ந்து விளக்குதல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.5 ஆய்வு வினா

இவ்வாய்வு நான்கு வினாக்களுக்கு விடை காணும் நோக்கில் அமைந்துள்ளது. அவை கீழ்க்காணுமாறு:

1. தேன்கூடு கவிதைத் தொகுப்பில் காணப்படும் மலேசியத் தமிழச் சமூகச் சாயல்கள் யாவை?
2. தேன்கூடு கவிதைத் தொகுப்பில் காணப்படும் மலேசியத் தமிழச் சமூகத்தில் நிலவும் சிக்கல்கள் யாவை?
3. தேன்கூடு கவிதைத் தொகுப்பில் கவிஞர் வெளிப்படுத்தியுள்ள மலேசியத் தமிழச் சமூகப் படைப்புருவாக்கக் கருத்தாக்கங்கள் யாவை?
4. தேன்கூடு கவிதைத் தொகுப்பில் காணப்படும் மலேசியத் தமிழச் சமூகத்தில் நிலவும் சிக்கல்களை வெளிக்கொணர பயன்படுத்தபட்ட உத்திகள் யாவை?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.6 ஆய்வு நன்மைகள்

ஒவ்வொரு ஆய்வும் தனக்கென்ற முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. அவ்வகையில், தேன்கூடு கவிதைத் தொகுப்பை ஆராய்வதின் வழி ஆய்வாளர் மலேசியத் தமிழச் சமூகத்தில் நடந்த பல நிகழ்ச்சிகளை அடையாளம் காண இயலும். அவை மலேசியத் தமிழச் சமூகத்தின் வரலாற்றுப் பதிவுகளாக நிலைப்பெற வழிபிறக்கும்.

அத்தோடு இவ்வாய்வு வழி, மலேசியத் தமிழச் சமூகம் தொடர்பாகக் கவிஞர் கூற விழையும் கருத்தினையும் வாசகர்கள் நன்கு அறிந்து கொள்வார்கள். மேலும், மலேசியத் தமிழர்களின் வாழ்வியலைச் சித்தரிக்கும் மேற்கோளாகவும் வரலாற்று ஆவணமாகவும் இவ்வாய்வு அமைகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அடுத்து, இக்கவிதைத் தொகுப்பின் வழி கவிஞர் காட்டவிழையும் தமிழச் சமூக உருவாக்கக் கருத்தாக்கங்கள் ஆராயப்பட உள்ளமையால், ஒரு பண்பட்ட சமூகம் எவ்வாறு அமைதல் வேண்டும் என்ற கட்டமைப்பைக் காணவியலும். இது வருங்கால சந்ததியினருக்கு ஒரு வழிகாட்டலாக அமைகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொடர்ந்து, கவிதைகள் தொடர்பான ஆய்வுகள் பலவாறாக உள்ளன, இருப்பினும், குறிப்பாகத் தேன்கூடு கவிதைத் தொகுப்பில் காணப்படும் மலேசியத் தமிழச் சமூகம் தொடர்பான எந்தவொரு ஆய்வும் இதுவரையில் செய்யப்படவில்லை. இவ்வாய்வின் வழி இக்குறை களையப்படும்.

மேலும், பட்டப்படிப்புப் பயிலும் மாணவர்களுக்கு மேற்கோளாகவும், இதர ஆய்வாளர்களுக்கு அடுத்தக்கட்ட ஆய்வினை மேற்கொள்வதற்கு உறுதுணையாகவும் இவ்வாய்வு அமையும் என்பதில் ஐயமில்லை. இவ்வாய்வில் சமூகம் குறித்துக் கூறும் கவிதைத் தொகுப்பில் பேசப்படும் சமூகச் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் வழிவகைகளை முன்மொழியவும் வழிகோலுகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.7 ஆய்வு எல்லை

இவ்வாய்வு, தேன்கூடு கவிதைத் தொகுப்பினைத் தனது ஆய்வுப் பொருளாக உட்படுத்தியுள்ளது. இவ்வாய்வில் சமூகவியல் கோட்பாட்டின் பிரிவான பயன்முறை கோட்பாடு (*funtionnalist perspective)* பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வாளர் தமது ஆய்வில் தேன்கூடு கவிதைக் தொகுப்பில் உள்ள 265 கவிதைகளையும் பயன்படுத்தி ஆய்வு செய்துள்ளார்.

1.8 ஆய்வு மூலங்கள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மலேசியக் கவிதை இலக்கியம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் இவ்வாய்விற்கு முதன்மைச் சான்றாதாரமாக விளங்குவது தேன்கூடு கவிதைத் தொகுப்பில் உள்ள 265 கவிதைகள் ஆகும். துணைச் சான்றாதாரமாக விளங்குவது தலைப்புத் தொடர்பான விமர்சனக் கட்டுரைகளும் ஆய்வடங்களும் மலேசிய மரபு கவிதைகளின் வரலாற்று நூல்களுமாகும். இவ்வியலில் சமூகவியல் இலக்கிய அணுகுமுறைப் பயன்படுத்தபடும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.9 கலைச்சொல் விளக்கம்

1.9.1 சமூகம்

சமூகம் என்பது மனிதர்களின் தேவையின் காரணமாகத் தோன்றியது. தங்களுக்குள் கூட்ட நிலையினை ஒருவாக்கிக் கொள்ளும் அமைப்பே சமூகம் என்கிறார் பிளேட்டோ என்னும் அறிஞர்.

(ராமஸ்வாமி, 2004).

மனிதன் தன்னுடைய பற்றுகளைத் தனித்திருந்து தனித்தனியாக அடைய இயலாது. பிறருடைய துணை மற்றும் கூட்டுறவு இருந்தால்தான் அவற்றை அடைய முடியும். எனவே மனிதன் தன்னுடைய பற்றுகளைப் பெற பிறரோடு இணைந்து சமூகத்தை அமைத்துக் கொள்கிறான் என்கிறார் தாமசு அக்கினாசு என்னும் அறிஞர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

(ராமஸ்வாமி, 2004).

இயற்கை நிலையில் மனிதர்கள் வாழ்ந்தபோது அவர்களுக்கு ஏற்பட்ட சிக்கல்களைப் போக்கத் தங்களுக்குள் ஓர் ஒப்பந்தத்தைக் கொண்டு சமூகத்தை நிறுவினார்கள் என்கிறார் தாமசு ஆஃதுசான் இலாகு, உருசோ

என்னும் அறிஞர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

(ராமஸ்வாமி, 2004).

மனிதனுக்குச் சமூக இயல்பு இயற்கையிலேயே இருக்கிறது. இந்தச் சமூகவியல்பு காரணமாக அவன் பிறரோடு கூடி வாழ்கின்றான்; பழகுகின்றான்; அவ்வாறு பழகமுற்படும்போது சமூகம் தோற்றமடைகிறது என்கிறார் அரிசுடாட்டில் என்னும் அறிஞர்.

(ராமஸ்வாமி, 2004).

இவ்வாறு சமூகம் குறித்துப் பல்வேறு விளக்கங்களை அறிஞர்கள் வழங்குகின்றனர். இத்தகைய இயல்புகளுடன் தோன்றிய சமூகத்தின் நடத்தைகள் யாவும் தேவையின் காரணமாக உதயமாகின்றது. தேவையே சமூகத்தின் பரவலையும் வரையறை செய்கின்றது. மனிதன் பிறக்கும்போதே பிறருடைய கூட்டுறவும் தேவைப்படுகின்றது. அந்தத் தேவையும் சமூக இயல்பும் இணையும் போது சமூகம் தோன்றிவிடுகிறது. இவ்வாறு தோன்றிய சமூகம் மெல்ல மெல்ல வளர்ச்சி அடைந்து நாகரிக நிலையை எய்திகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மக்கள் கூடி வாழும் தொகுதியையே சமூகம் என்கிறோம். தனிமனிதன், குடும்பம், சமூகம், அரசியல் ஆகிய உறுப்புகளைச் சமூகத்தின் அங்கங்கள் எனலாம். மனிதன், சமூகத்தின் ஓர் அங்கமாகத் திகழ்பவன். தனிமனிதனாக

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வாழ்ந்த மனிதன் குழுவாக வாழத் தலைப்படும்போது சமூகம் உருவாகிறது. தனிமனிதன் சமூகத்தின் அங்கமாக இருப்பினும் அந்தச் சமூகத்திற்கு கட்டுப்பட்டே நடக்க வேண்டியுள்ளது. பொதுவாகச் சமூகம் என்பது சமூக உறவுகளின் தொகுப்பு என்ற பொருளைத் தந்தாலும் நடைமுறையில் சமூகவியல் அறிஞர்கள் இப்பொருளில் இச்சொல்லைப் பயன்படுத்துவது இல்லை. ஒரு நிலப்பரப்பில் நிலையாகக் கூடிவாழும் பெருந்திரளான மக்கள் என்ற பொருளில் சமூகத்தைக் குறிப்பிடுகிறார்கள்(பரமசிவானந்தம்,1962, கல்பகம்,1971).

மேலும் “சமூகம் என்பது பல்வேறு சமூக நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாக விளங்கும் சமூகக் கட்டமைப்பு” என்று குறிப்பிடுகிறார்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

(மறைமலை,1991).

1.9.2 தமிழச் சமூகம்

மலேசியாவிற்கும் இந்தியாவிற்கும் குறிப்பாகத் தமிழகத்திற்கும் ஏற்பட்டிருந்த தொடர்புகளை ஐரோப்பியர் வருகைக்கு முந்தையது என்றும், ஐரோப்பியர் வருகைக்குப் பிந்தையது என்றும் இரண்டாகப் பிரித்துக் காணலாம். முதல் காலக்கட்டத் தொடர்பு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பழமை வாய்ந்தாகக் காணப்படுகின்றன, இந்த முதல் காலக்கட்டத் தொடர்பு ஓர் உயர்ந்த நிலையில் வணிகம், அரசியல் என்ற அளவில் காணப்படுகின்றன. அக்காலப்பகுதியில் பெருவணிகர்களும் அரசியல், பண்பாட்டுத் தூதுவர்களும் வந்து, பின் மீண்டும் தமிழகத்திற்கே திரும்பிவிட்டதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. இன்றைக்கு இந்நாட்டில் வாழ்கின்ற தமிழர்களுக்கும் அந்த முதல் காலக்கட்டத் தமிழர்களுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை, ஏனெனில், இன்று இந்நாட்டில் வாழும் தமிழர்கள் முதல்காலக்கட்ட தொடர்புகளின்வழி இங்கு வந்து சென்றவர்களின் சந்ததியினர் அல்லர். மாறாக, ஆங்கிலேயர்கள் மலாயாவின் வளங்களைக் கைப்பற்ற காடுகளை அழிக்கவும் தோட்டங்களை உருவாக்கவும், அத்தோட்டங்களில் வேலை செய்யவும் இந்தியர்கள் குறிப்பாக, தமிழர்கள் கூலிகளாகப் பெருமளவிற்குக் கொண்டுவந்து குடியேற்றப்பட்டனர். இந்தியத் துணைக்கண்டத்தில் தென்னிந்தியத் தமிழனே ஆங்கிலேயருக்குத் திருப்திகரமான வேலைக்காரனாக இருந்துள்ளான் (Karnial Singh Sandhu, 1969) எனும் வரலாற்றாசிரியரின் குறிப்பு இங்குக் குறிப்பிடத்தக்கது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதன் காரணத்தாலேயே இந்நாட்டில் பிற இந்தியர்களைக் காட்டிலும் தமிழர்களின் எண்ணிக்கைப் பன்மடங்கு அதிகமாகக் காணப்படுகின்றது. 1991 ஆம் ஆண்டு நடந்த ஒரு கணக்கெடுப்பின் வழி தென்னிந்தியர்களில் 3,87,509

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பேர் தமிழர்கள், 39,986 பேர் தெலுங்கர்கள், 17,790 பேர் மலையாளிகள் என்று புள்ளி விவரத்திலிருந்து மலேசிய மண்ணில் குடியேற்றப்பட்ட மக்கள் பற்றிய நிலைய அறிய முடிகிறது (தமிழ் இனி, 2000).

இந்நாட்டில் வாழும் தமிழர்கள் பல்வேறு சமயத்தைச் சார்ந்திருப்பினும் இனத்தாலும் மொழியாலும் ஒன்றிணைந்து வாழ்கிறார்கள். இவ்வாய்வில் 'மலேசியத் தமிழச் சமூகம்' எனும் சொற்றொடர் மலேசிய நாட்டில், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டு வாழும் தமிழர்களையே குறிக்கின்றது. தமிழ் என்ற சொல் ஓர் இனத்தைக் குறிக்கும்போது அகரச்சாரியை சேர்த்துச்சொல்லுதல் வேண்டும் என்று தொல்காப்பியர் கூறியவிதிப்படி(சீனி நைனா முகம்மது, 2017) தமிழச் சமூகம் என்று அகரச்சாரியை சேர்த்துக் குறிப்பிட்டப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.9.3 சமூகச் சாயல்

கல்வியாளர்கள் பலரும் சாயலைப்பற்றி பல்வேறு விளக்கங்களைக் கொடுத்துள்ளனர். ஆனால் அனைவரது விளக்கத்திலும் மூன்று முக்கிய அம்சங்கள் அடங்கியிருப்பதைக் காணலாம்; அதாவது அறிவாற்றல், உணர்ச்சி, நடவடிக்கை ஆகியவையே அவையாகும் (Syed Arabi, 1998).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அறிவாற்றலைத் தனிமனித சிந்தனையில் பதிந்துள்ள் அறிவு அல்லது தகவல்கள் என்று பொருள் கொள்ளலாம். மேலும், உணர்ச்சி என்பது ஒரு பொருளின் மீது ஒருவர் கொண்டுள்ள ஈடுபாட்டைக் குறிக்கும். அடுத்து, நடவடிக்கை என்பது ஒருவர் ஒரு பொருளின்பால் காட்டும் நடத்தையைக் குறிக்கும்.

சாயல், ஓர் உயிருள்ள அல்லது உயிரற்றப் பொருளின் மீது ஒருவர் எண்ணத்தில் தோன்றக்கூடிய அறிவு, மதிப்பீடு, நடத்தையாகும். இந்த அறிவாற்றல் என்பது சிந்தனை, கருத்தாக்கம், நோக்குநிலை, நடத்தை,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கருத்துப்பதிவு, பண்பு, நம்பிக்கை ஆகியவை அடங்கிய அறிவுக்களஞ்சியமாகும் (Syed Arabi, 1998).

வேறு வார்த்தையில் கூறுவதானால், ஒரு பொருளைப்பற்றிய ஒருவரது பட்டறிவு, பண்பு, நடத்தை, ஆகியவற்றின் ஒட்டுமொத்தக் கலவையே சாயல் ஆகும். இது மட்டுமின்றி, மற்ற சில கல்வியாளர்களும் சாயலை, அறிவையும் உணர்வையும் கொண்டுள்ளதாகவே வகைப்படுத்தியுள்ளனர். எடுத்துக்காட்டாக, போல்டிங் என்பவர் சாயலை, ஒருவர் ஒரு தனிமனிதன்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அல்லது சமுதாயத்தின் மீது கொண்டுள்ள அகவய அறிவாகத் தொடர்புபடுத்தியுள்ளார். அவரது கருத்துப்படி, சாயல் என்பது கருத்து, பண்பு என இரு கூறுகளை உள்ளடக்கியதாகும். கருத்துப் பிரிவு புறத்தன்மையையும், பண்புப் பிரிவு சிந்தையில் தோன்றும் மதீப்பீட்டையும் குறிக்கும் (Boulding, 1973). அவரது கூற்றுப்படி, சாயல், சிந்தனையில் புதைந்துள்ள அறிவாற்றல் அல்லது தகவல் மட்டுமல்ல மாறாக, மன உணர்வுகளையும் பண்புகளையும் உள்ளடக்கியது என்பதேயாகும். இவ்வாய்வில் சமூகச் சாயல் என்பது தேன்கூடு கவிதைத் தொகுப்பில் மலேசியத் தமிழச் சமூக மக்களின் நிலையைச் சித்தரிக்கின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.9.4 சமூகச் சிக்கல்

சமூகச் சிக்கல் எனப்படுவது, ஒரு சமுதாயத்தில் அதிகமானோருக்கு எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் ஒரு சூழல் அல்லது நடவடிக்கை. மேலும், சமூக உறுப்பினர் விரும்பத்தகாத மற்றும் தீர்வு தேவை எனக் கருத்தபடுகின்ற சூழல் அல்லது நடத்தை சமூகச் சிக்கலாகும். காட்டாக, போதைப்பொருள், சிறார்கொடுமை, மதுபழக்கம், வறுமை போன்றவை சமூதயச் சிக்கலாகக்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கருதப்படுகிறது (William Kornblum & Joseph Julian, 2012). இவ்வாய்வில் சமூகச் சிக்கல் என்பது தேன்கூடு கவிதைத்தொகுப்புக் கவிஞர் கூறும் சமூக எதிர்மறை விளைவுகளாகும்.

1.9.5 உத்தி முறை

அகராதிகள் பல்பொருள் கூறினும் நடைமுறையில் இன்று அச்சொல் Techinique என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு "உத்தி, தந்திரம், கருத்தலளவை, பாம்பின் படப்பொறி, தேமல், சேர்க்கை, இசைவு, இணக்கம், தக்க தன்மை, பேச்சு, அறிவு, சீதேவி என்னுந் தலைக்கோலம்" (அகராதி குழு, 1964) எனும் பொருள்களைத் கழகத் தமிழ் அகராதி கூறுகிறது. உத்தி என்ற சொல்லுக்கு, "அனுமானம், அறிவு, சேர்தல், அபின், இசைவு, இணக்கம், செல்வம், சொல், தந்திர உத்தி, திருவுறுப்பு, தருக்கங்கள், தேமல், படப்பொறி, ஆபரணத் தொங்கல், தூக்கம், பேசுதல், பொருந்துமாறு" (கதிரைவேற்பிள்ளை, 1910) எனத் தமிழ் அகராதி விளக்கம் அளிக்கிறது. இப்பொருள் அடிப்படையில் நோக்கின் ஒருவர் ஒன்றைச் செய்யும்போது பயன்படுத்தும் தொழில், கலை நுட்பக் கூறுகளே உத்தி என்றாகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.9.6 சமூகப் படைப்புருவாக்கக் கருத்தாக்கம்

கருத்துருவாக்கம் என்பது பல பொருள்களில் காணப்படும் ஒருமித்த பண்புகளை மொழியால், குறியீட்டால் குறிப்பது ஆகும். அதுவே பொதுமைக்கருத்தாகும். புலன்காட்சி அனுபவத்தின் விளைவாகத் தோற்றுவிக்கப்படுவது பொதுமைக்கருத்தாகும் (அகராதி குழு, 1964). இவ்வாய்வில் படைப்புருவாக்கக் கருத்துருவாக்கம் என்பது தேன்கூடு கவிதைத்தொகுப்புக் கவிஞர் கூறும் சிக்கலுக்கானத் தீர்வுகளாகும்.

1.9.7 சமூகவியல் கோட்பாடு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சமூகவியல் எனப்படுவது மனிதனின் நடவடிக்கை, சமூக உறவுகள், சமூக நடத்தைகள், சமூக அமைப்பு முறை, சமூக வாழ்க்கை முறை ஆகியவற்றைச் சமூக அறிவியல் மூலமாக ஆய்வு செய்தலாகும். மனிதனின் பெரும்பாலான செயல்பாடுகள் இன்னொரு மனிதனைத் தொடர்புபடுத்தியே அமைகின்றன. எனவே சமூகவியலில் தனிமனிதனும் சமூகமும் ஒன்றோடு ஒன்று சார்ந்து இருப்பதை ஆய்வுப் பொருளாகக் கைக்கொள்ளப்படுகின்றது.

இந்தச் சமூகவியல் கோட்பாட்டைத் தமிழ் இலக்கியப் படைப்புகளில் பயன்படுத்தியதால் உலக வாழ்க்கையோடு இணைந்து மக்களின் சமூகவியல்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கோட்பாடு மக்களின் சிக்கலையும் பிளவுகளையும் முன்வைக்க உதவுகின்றது. காலத்தின் கண்ணாடி என்ற முப்பெரும் நிலையை எடுத்துக்கூறவல்லது சமூகவியல் கோட்பாடாகும். ஆக, ஆய்வாளர்கள் தமிழ் இலக்கியப் படைப்புகளில் இந்தக் கோட்பாட்டைப் பயன்படுத்த முன்வரவேண்டும்.

1.9.8 பயன்முறை நோக்குக் கோட்பாடு

பயன்முறை நோக்கு, சமூகம் நிலையானதாகவும் முறையாகவும் இருப்பதாக வரையறுத்துக் காட்டுகிறது. ஆனால் பல பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும் தனித்தனியே இயங்குவதோடு மற்ற பகுதி இயங்குவதற்கும் வழிவகுக்கின்றது. ஒவ்வொரு பகுதி சமூகத்தினரும் எடுத்துக்காட்டாகக் குடும்பம், பள்ளி, பொருளாதரம், அரசாங்கம், நிறுவனங்கள் ஆகிய அனைவரும் தனித்தனியே சமூகத்திற்காகச் செயலாற்றிக் கொண்டுதான் வருகின்றனர். குடும்பம் பிள்ளைகளைத் தலையெடுக்க வைக்கிறது; பள்ளி அறிவை ஊட்டுகிறது; பொருளாதாரம் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தருகிறது; அரசாங்கம் பாதுகாப்பைத் தருகிறது. இதனைத் தான் Herbert spencer எனும் சமூகவியலாளர் சமூகத்தினை உடல் உறுப்புகளுக்கு உவமையாகக் கூறியுள்ளார். உடல் உறுப்புகள் அனைத்தும் ஒத்துழைத்தால் மட்டுமே உடல் சீராக இயங்க இயலும் என்பது அவருடைய கருத்து. உடலில் ஏதேனும் ஒரு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பகுதி தன் பணியைச் சரிவர இயக்கவில்லையெனில் மற்ற பகுதிகள் செயலிழக்க நேரிடும் (John J.Macionis, 2013).

1.10 தொகுப்புரை

மேற்கண்ட தகவல்களின் அடிப்படையில் மலேசிய மரபு கவிதை இலக்கியத் தொகுப்புகளில் ஒன்றான தேன்கூடு கவிதைத் தொகுப்புக் காட்டும் சமூக நிலை குறித்த செய்திகள் ஆய்வு செய்யப்படவுள்ளன. தேன்கூடு கவிதைத் தொகுப்புக் காட்டும் மலேசியத் தமிழச் சமூகச் சாயல் எனும் இவ்வாய்வு மலேசியத் தமிழச் சமூகத்தின் வாழ்வியலையும் பண்பாடு வரலாற்றையும் காட்டும் ஆவணமாகத் திகழும். ஆகவே, இவ்வாய்வு தன் நோக்கம் எனும் வட்டத்தில் இருந்து தடம் பிறழாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக, ஆய்வாளர் ஆய்வின் பின்னணி, ஆய்வுச் சிக்கல், நோக்கம், வினா, எல்லை, ஆய்வு மூலங்கள், கலைச்சொற்கள் என்ற ஆய்விற்கு அடிப்படையாக அமையும் முக்கியக் கூறுகளைத் தொகுத்து இந்த இயலில் வழங்கியுள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi